# ஆதாரம்

தை - மாசி - 1995
இதழ் - 15
விலை - 20/=

சமூக, பொருண்மிய, விஞ்ஞான ஆய்வு இதழ்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்



வேளாண் தொழிலின் உறுதுணை நண்பன்

"பசுமை வேளாண் சேவை"

# பசுமை வேளாண் சேவை

"பசுமைப்புரட்சி தமிழீழத்தின் எழுச்சி"

யாழ்ப்பாணம்



# எனது அன்பார்ந்த தமிழ் மக்களே,

நாம் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் தேசம். நாம் சலுகைகளுக்காக கை நீட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல. எத்தனையோ ஆண்டுகளாக, எத்தனையோ அழிவுகளைச் சந்தித்து, எத்தனையோ உயிர்களைப் பலிகொடுத்து, எத்தனையோ தியாகங்களைப்புரிந்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, நாம் எமது போராட்டத்தை எமது இலட்சியப்பாதையில் முன் நகர்த்தி வருகிறோம். நாம் சிந்திய இரத்தமும் கண்ணீரும் வீண்போகவில்லை. இன்று எமது போராட்டம் தன்னாட்சியை நோக்கி வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டுவருகிறது. ஒரு தொடர்ச்சியான, உறுதியான போராட்டம் மூலமே நாம் இந்தக் கட்டத்தை எட்டிவிட முடிந்தது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*

**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

ஆதாரம்

# ஆதாரம்

தை - மாசி 1995
இதழ் - 15

*"ஆயுதம் செய்வோம்
நல்லகாகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பலவண்மைகள் செய்வோம்"*

– பாரதியார்

போர்க்கால சூழ்நிலைகள் மனித தலையீடுகள், இயற்கை சமநிலை மாற்றங்கள் போன்ற காரணிகளால் எமது தேசத்தின் சூழல் பாதுகாப்பானது நாளுக்கு நாள் அழிவுற்ற வண்ணமே செல்கின்றன. எனவே நாளுக்கு நாள் அழிவுறும் எமது தேசத்தின் சூழலைப் பாதுகாக்க வேண்டியது தேசத்தில் வாழும் அனைத்து மக்களையும் சாரும். இதன் முன்னேற்பாடாக தேசத்தின் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு தேக்கு மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய நிதியத்தினூடாக மாவீரர் சோலை சேமிப்புத் திட்டமானது 1994-ம்ஆண்டு நவம்பர் 27-ம் திகதி மாவீரர் தினத்தன்று யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு, வடதமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டமானது மக்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டுமல்லாது இத் திட்டத்தின் மூலம் நடப்படும் தேக்கு மரங்கள் சூழல் பாதுகாப்பில் பங்கேற்கப்படுவதால் மனித மற்றும் ஏனைய உயிரினங்கள் நன்மையடைய ஏதுவாக அமைகின்றது.

வயது வேறுபாடின்றி இத் திட்டத்தில் இணைய வாய்ப்பளிக்கப்படுவதுடன், முதலீட்டுத் தொகை ரூபா 5,000/- வும் செலுத்தி இத் திட்டத்தில் இணையும் முதலீட்டாளர்களுக்கு திட்ட நடைமுறை விதிகளுக்கமைய பத்து வருடத்தின் பின் முதலீட்டுத் தொகை




ரூபா 5,000/- வும் மேலும் ரூபா 10.000/- வும் வெகுமதியும் சேர்த்து மொத்தமாக 15,000/- வழங்கப்படுவதுடன், அடுத்த பத்து வருட முடிவில் மேலும் ரூபா 15,000/- வெகுமதியாக வழங்கப்படும்.

அடுத்த 25 வருட இறுதி முடிவில் மேலும் ரூபா 10,00000/- வும் வெகுமதியாகப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

இதனால் மாணவர்கள் இணைவதன் மூலம் தமது கல்வியைப் பண வசதியின்றி இடைநிறுத்தாது தொடர்ந்தும் கல்வி பயின்று சமுதாயத்தில் சிறந்த கல்விமான்களாகத் திகழ்வதற்கு இத் திட்டம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. □□

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

உங்கள் சகல நகைத் தேவைகளுக்கும்

**ஈஸ்வரன் நகை மாளிகை**

யாழ் வீதி.
கிளிநொச்சி.

---

**த. இராசையாவும் மைந்தனும்**

சகல விதமான
பெயின்ற வகைகளுக்கு

நாடுங்கள்!

**டியுகோ, டியூலக்ஸ், பென்ரலைற்**

23/10 அருச்சுனா சாலை
யாழ்ப்பாணம்.

---

| | |
|---|---|
| **பல்பொருள்** | V. S. B. GROUP |
| **மொத்த சில்லறை** | 266A, Stanley Road |
| **வியாபாரம்** | JAFFNA |

---

**அன்பார்ந்த ஆதாரம் வாசகர்களே**

ஆதாரம் தொடர்பான உங்கள் கருத்துக்களை எழுதுவதோடு, உங்கள் படைப்புக்களையும் எமக்கு அனுப்பி வையுங்கள் தகுதியானவை பிரசுரமாகும்.

'ஆதாரம்'

எம்மை அடக்கி ஆழ அழித்து ஒழிக்க நினைத்தவர்கள் கூட எமது உண்மைகளை, யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு எம்மைத் தேடி வருவது எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் எமது மாவீரர்களின் தியாகங்களாலும் எமது மக்களின் உறுதியினாலும் கட்டி வளர்க்கப்பட்ட போராட்ட வளர்ச்சியே. இதை நீங்கள் அனைவரும் தெளிவாக புரிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

எமது போராட்டம் தீவிரமாக மிகவும் உறுதியாக முன்னேறி வளர்ச்சியுறும் வேளை எமது பிரதேசத்தில் கட்டுமானப் பணிகளையும், எமது தேசியத்தலைவர் அவர்கள் ஆரம்பித்து வைத்துள்ளார். அதன் அமைப்புகளாகத்தான் இன்று மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் அமைப்புக்களான சட்ட ஒழுங்கை நிலை நாட்டும் நீதித்துறை காவல் துறை, நிர்வாகசேவை, வங்கிக்கட்டமைப்பு போன்ற சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்களும் அத்தோடு எமது தேசத்தின் அடித்தளமான பொருண்மியக் கட்டமைப்பை வளர்ப்பதற்கான அமைப்புக்களையும் உருவாக்கி உள்ளார். அதன் அமைப்புக்களான பொருண்மியக் கட்டமைப்பு, நிர்வாகக் கட்டமைப்பு, புனர் வாழ்வுக் கட்டமைப்பும் இணைந்து எமது துறைசார் வல்லுனர்களுடன் கூடி எமது தேசத்தை கட்டியெழுப்பும் மிகவும் முக்கியமான ஓர் ஆரம்ப நிகழ்வாக அமைவது நிச்சயமாக எமது மண்ணின் மக்களின் நிரந்தர வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் எமது தேசியத் தலைவரின் முன்னெடுப்புகளுக்கு பக்கத் துணையாக அமையும் அவரின் ஆசியும் வழிகாட்டலுமே இவற்றை இந் நிகழ்வின் முன்னெடுப்புகளாக அமைந்துள்ளது.

திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்
அரசியற்துறைப் பொறுப்பாளர்

1994ம் ஆண்டு நவம்பர் மாதம் 16, 17, 18ம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்திய அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனம் காணல் 1995 — 2000 என்னும் ஆய்வுப்பட்டறையில் இடம் பெற்ற சில முக்கிய கருத்துரைகளில் சிலவற்றினை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

இன்று ஒட்டுமொத்தமாக தமிழீழம் என்ற ஒரு இடத்தை மையமாக வைத்து எமது அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்களிலே தான் குடியிருப்புகள், நகர அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை இனங்கண்டு இருக்கிறார்கள். இந்த திட்டங்களை முக்கியமாக நாங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். இதை நாங்கள் இன்று கூடி ஆராய்ந்திருக்கின்றோம். இனங்கண்டிருக்கின்றோம். இந்தஇனங்கண்ட பிரச்சனைகள் ஒவ்வொன்றாக மீண்டும் ஆராயப்பட்டு இதைஎவ்வாறு நடைமுறைப்படுத்துவதால் இதை நடைமுறைப்படுத்துவதற்கான சிக்கல்கள் என்ன இருக்கின்றன என்பதை ஒவ்வொன்றாக நாங்கள் மிகவும் ஆராய வேண்டும். ஆராய்ந்து ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை வடிவமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளை நாங்கள் கொண்டுவர வேண்டும்.

திரு. க. கரிகாலன்
துணைப்பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை.

இந்தப் பிராந்தியத்தின் தேவைகளை, இந்தப் பிராந்தியத்தை நன்கு உணர்ந்தவர்களாகிய இந்தப் பிராந்திய மக்களின் அபிலாசைகளை முழுமையாக வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதேயாகும். இவர்களது ஆலோசனை, தேவைகள் என்பன உணரப்படாது பிற இடங்களில் இருந்து திட்டங்களை உருவாக்கி செயற்பட்ட விதம் கடந்த கால அனுபவம் அதனால் ஏற்பட்ட தோல்விகள் நாங்கள் அறிந்ததே. எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்திலும், மக்களின் பங்களிப்பை முழுமையாக இணைக்க வேண்டிய தேவை இருக்கிறது. அவர்களிடம் கலந்தாலோசித்து திட்டங்களை தீட்டவும், நடைமுறைப்படுத்தவும் மிகவும் இன்றியமையாத தேவைகள் இருக்கின்றது. இங்கே நாங்கள் சில அணுகுமுறைகளை மேற்கொள்ளலாம், என கருதுகின்றோம். அதாவது ஏற்கனவே இங்கு குறிப்பிட்டது போல், ஒரு நீடித்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான வரையறைகளைப்போட்டுக் கொள்வோம். அடுத்தது இங்குள்ள வளங்களின் உச்ச பயன்பாடு - முழுப் பயன்பாடுகளையும் கருத்தில் எடுத்துக் கொள்வோம் உதாரணமாக, இங்கு வறண்ட பிரதேசத்தில் வீணாகிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு துளி நீரும் பயன்படுத்தப்பட வேண்டும். இதேபோன்று சகல மனித ஆற்றல், மற்றும் பௌதிக வளங்கள் முழுமையாக உச்சபயன்பாட்டிற்குட்படுத்தப்பட வேண்டும்.

திரு. வி. செம்பியன்
பணிப்பாளர்
த. பொ. மே. நிறுவனம்.

யாழ்ப்பாணம்

எமது போராட்ட காலத்திலேயே சகல துறைகளிலும் சமாந்திரமாக முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கிறது. இம் முன்னேற்றத்திற்கு ஸ்ரீலங்கா அரசின் இறுக்கமான பொருளாதாரக் கட்டுப்பாட்டினால் மந்த நிலைய டைந்துள்ள எமது பொருளாதாரமும், மூலவளப் பயன்பாடும், மானிட மூல வளமும், முகாமைத்துவ நிர்வாக நடைமுறைகளும் மீண்டும் புத்துயிர் கொடுக்கப்பட்டு மரபுசார்ந்த தொழில்நுட்பத்திற்கு மீண்டும் செல்லாது பொருத்தமான தொழில்நுட்பங்களோடு வலுப்பெறக் கூடிய பொருளா தாரக் கட்டமைப்பொன்றை கட்டியெழுப்ப வேண்டிய அவசியமும் அவசர மும் எழுந்துள்ளது. இதற்கு இங்குள்ள பொருளியலாளர்கள்' பொறியிய லாளர்கள், சமூகவியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், ஆராய்ச்சியா ளர்கள், நிர்வாகிகள் தங்களை இக்கைங்கரியத்தில் ஆளாக்கிக் கொள்ள வேண்டிய அர்ப்பணிப்புத் தேவையாக உள்ளது.

திரு. சு. டொமினிக்
பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை.

## அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்

1995 – 2000

முடிவாக அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களில் துறைசார்ந்த வகையில் விவசாயம், மீன்பிடி, சூழல், கைத்தொழில், விலங்கு வேளாண்மை விடயங்களில் இத்துறை சார்ந்த தேவைகளையும், மக்களின் பிரச்சினைகளையும் இத்துறை சார்ந்த பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் இதற்கான ஆளணிகள், தொழில்நுட்பவிடயங்கள் பற்றியும் தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அத்துடன் உட்கட்டுமானத்தின் அவசியம் கருதி பொருளாதார உட்கட்டு மான அடிப்படையில் வீதிகள், போக்குவரத்து, சக்தி, நீர்ப்பாசனம், நகர அபி விருத்தி மனித குடியிருப்புக்களின் அமைவிடங்கள் பற்றியும் முக்கியமாக தீர்மா னிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இந்த வகையில் சமூக உட்கட்டுமான அபிவிருத்தியில் எமது கல்வி விடயங் களையும் சுகாதார நலன்களுக்கும், தேவைகளுக்குமான [திட்டங்களை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

திரு. ஆ. ரவி,
பொறுப்பாளர்,
தமிழ்ச் புனர்வாழ்வுக்கழகம்.

அரச முகவர்களான அரச அதிபர் செயலகம், அரச வைத்தியசாலை போன்றவை யுத்த நெருக்கடிகளில் செயலிழந்து ஸ்தம்பிதமடைந்தன. இந்த நேரத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் களத்தில் குதித்து அல்லலுறும் மக்களுக்கு ஆறுதலளிக்க முன் வந்தனர். சர்வதேச நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களுமாகச் சேர்ந்து மக்களுக்கு உணவு, உடை, தங்குமிடவசதி போன்றவற்றை அளித்து ஆதரவை நல்கினர்.

திரு. வே. ஜெயராசசிங்கம்
அரச சார் பற்ற நிறுவனங்களின் பிரதி நிதி

இந்த அடிப்படையில் அதாவது புனரமைப்பும், அபிவிருத்தியும் என்பது நாம் எண்ணும் பொழுது எமது பிரதேசத்தை எமது மனங்களின் முன் கொண்டு வரும் பொழுது 1983ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த இராணுவ வன்செயல் காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அனர்த்த அழிவுகள் எல்லாவற்றையும் இப்பிரதேச மக்கள் சந்தித்துள்ளனர். பாதிப்படைந்துள்ளனர். எனவே, அழிவுகள், அபிவிருத்தி, பிரதேசம் என்று மூன்று குறிக்கோள்கள் அல்லது பண்புகளை கவனத்திற் கொண்டு எமது பிரதேசத்தின், மாவட்டத்தின் புனரமைப்புத் திட்டத்தை தயாரிக்க வேண்டிய நிலையிலுள்ளோம்.

திரு. செ. பத்மநாதன்
திட்டப்பணிப்பாளர்

## ஆய்வுப்பட்டறையில் இடம் பெற்ற கருத்துரைகளில் சில தலைப்புக்களின் விபரம்

1. ''விவசாய புனரமைப்பும் எதிர்கால அபிவிருத்தியும் விவசாயிகளின்தேவையும்''
2. ''விலங்கு வேளாண்மைப் புனரமைப்பும் எதிர்கால அபிவிருத்தியும் தேவையும்''
3. ''நிலைத்து நிற்கும் அபிவிருத்தித் திட்டங்களும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவமும்''
4. ''கடல் தொழில் துறை சார் புனர் நிர்மானமும் அபிவிருத்தியும்''
5. ''வடக்கு கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில் அபிவிருத்தி''
6. ''வடக்கு கிழக்கின் சக்தி தேவை''
7. ''நீர்வளம் நீர்ப்பாசனம் நீர் வழங்கல் வடிகாலமைப்பு''
8. ''போக்கு வரத்தும் தொடர்பு சாதனமும்''
9. ''பிரதேச அபிவிருத்தி மையங்கள்''
10. ''மனிதக் குடியிருப்புக்கள்''
11. இடம் பெயர்ந்தோர் பிரச்சினையும் அவர்களுக்கான புனர் வாழ்வும்''
12. ''வடக்கு கிழக்கின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்''
13. ''வடக்கு கிழக்கு அபிவிருத்தியும் நிதி நிறுவனங்களும்''
14. ''அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும்''

# மழை நீரை சேமிப்பதன் அவசியம்

நா. குகநாதன்

"கடற் கரையை அடுத்துள்ள பிரதேசங்களில் 1960 ஆண்டுகளுக்கு முன் நன்னீர் கிணறுகளாக இருந்தவை இன்று உவர் நீர் கிணறுகளாக மாறியுள்ளதை அப் பிரதேசத்தில் வாழும் மக்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதனால் நன்னீர் (குடிநீர்) பெறுவதற்கு தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது"

நீர்வளம் ஒரு நாட்டின் முக்கிய வளங்களுள் ஒன்றாகும் ஒரு நாட்டில் ஏனைய வளங்கள் இருந்தும் நீர்வளம் இல்லையாயின் அந் நாட்டில் மக்களோ அன்றி ஏனைய ஜீவராசிகளோ உயிர் வாழ்வது கஸ்டம். யாழ் குடா நாட்டில் மக்கள் செறிந்து வாழ்வதற்கு முக்கிய காரணம் தரைக்கீழ் நன்னீர் கிடைப்பதே யாழ் குடா நாட்டில் பெரிய ஆறுகளோ நீர்ப்பாசன குளங்களோ அன்றி பெரிய நீர்த்தேக்கங்களோ இல்லாத காரணத்தினால் இங்கு வாழும் மக்கள் தரைக்கீழ் உள்ள நன்னீரை நம்பி வாழவேண்டியவர்களாக உள்ளனர். யாழ் குடா நாட்டில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டதற்கு தரைக்கீழ் நன்னீர் கிடைப்பது முக்கிய காரணமாகும்.

யாழ் குடா நாட்டில் காணப்படும் நீர்வளத்தில் பெரும்பகுதி தரைக்கீழ் நீராக காணப்படுகிறது. இவ்வாறு காணப்படும் தரைக்கீழ் நீரானது உவர் நீரின் மேல் நன்னீர் வில்லையாக மிதந்து காணப்படுகிறது இந்த நன்னீர் வில்லையானது மாரி காலத்தில் தரைக்கீழ் சேமிக்கப்படும் மழைவீழ்ச்சி நிலை அளவிற்கு அமைய விரிவடைகின்றது. கோடை காலத்தில் பாவனைக்காக வெளியேற்றப்படும் நீரின் அளவிற்கு ஏற்ப ஒடுங்குகிறது. எனவே தரைக்கீழ் காணப்படும் நன்னீரின் அளவை அதிகரிப்பதற்கு கூடிய மழை நீரை தரை மேல் கூடிய நேரத்திற்கு தேக்கி வைப்பது மிக அவசியமாகும். தரை மேல் தேக்கி வைக்கப்படும் மழை நீரானது மண்ணின் நீர்வடியும் திறனுக்கும் மண்படைக்கு கீழ் உள்ள சுண்ணாம்பு கற்பாறைகளில் காணப்படும் வெடிப்புகள், பிளவுகள், துளாய்களுக்கு *(PORES)* ஏற்ப கீழ் நோக்கி வடிந்து நன்னீர் நிலைகளை அடைகின்றது. யாழ் குடா நாட்

டில் பலவகை மண்வகைகள் காணப்படுவதால். நீர்வடிமானம் குறைந்த மண் வகைகளில் மழைநீர் கீழ் நோக்கி வடிய கூடிய நேரம் எடுப்பதால் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் தற்காலிகமாக சில அசௌகரியங்களை நோக்குகின்றனர். ஆனால் இந்த தற்காலிக அசௌகரியங்களை பொருட்படுத்தாது மழை நீரை தேக்கி வைப்பதால் கோடை காலத்தில் கூடிய நன்னீரை பெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

## மழைவீழ்ச்சி:-

யாழ் குடா நாட்டில் வருடத்தில் சராசரி 1200 மி. மீ. மழை கிடைக்கிறது. மொத்த மழைவீழ்ச்சியில் பெரும்பகுதி மாரி காலத்தில் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதங்களில் கிடைப்பதால் ஏணைய 09 மாதங்களும் மிக மழை குறைந்த அல்லது வரட்சி மாதங்களாகவே காணப்படுகிறது. குடா நாட்டில் கிடைக்கும் மழைவீழ்ச்சியில் பரம்பல் ஒழுங்கற்று காணப்படுவதுடன் வருடத்தில் சராசரி 60 நாட்கள் மட்டுமே மழை நாட்களாக (WETDAYS) காணப்படுகிறது. இதனால் வருடத்தில் கூடிய நாட்களில் வரட்சி நிலவுகிறது எமக்கு வருடாந்தம் கிடைக்கும் மழைவீழ்ச்சியும் நிச்சயமற்ற தன்மையாக இருப்பதுடன் சில வருடங்களில் மிக குறைந்த மழைவீழச்சி காணப்பட்டது.

## அதிகரித்த நீர்ப்பாவனை!-

தரைக்கீழ் காணப்படும் நீரின் பெரும்பகுதி பயிர்களுக்கு நீர்ப்பாசனம், செய்வதற்காக பயன்படுத்தப்படுகிறது. 1960 ம் ஆண்டுக்கு பின் யாழ் குடா நாட்டில் நீர்ப்பாசனத்திற்கு அதிக அளவு தரைக்கீழ்நீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு தரிசாக விடப்பட்ட நிலங்கள் திருத்தப்பட்டு பயிர் செய்கைக்குட்படுத்தப்பட்டதும். செறிவான பயிர்ச்செய்கை(INTENSIVE CULTIVATION) முறைகளும் வெங்காயம், மிளகாய், புகையிலை போன்ற பணப்பயிர்கள் கூடிய நிலப்பரப்பில் பயிரிடப்பட்டதும் முக்கிய காரணங்களாகும். மேலும் நம் முன்னோர்களால் நீர்ப்பாசனம் செய்வதற்கு பயன் படுத்தப்பட்டு வந்த துலாப் பட்டை முறைகள் கைவிடப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் விரைவாகவும், தொடர்ச்சியாகவும் தரைக்கீழ் நன்னீர் வெளியேற்றப்பட்டு நீர்ப்பாசனம் செய்வதும் முக்கிய காரணியாக விளங்குகிறது.

## அதிகரித்த நீர்ப்பாவனையால்ஏற்படும் தீமைகள்

தரைக்கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் விரைவாகவும், தொடர்ச்சியாகவும் பெருமளவில்வெளியேற்றப்படும் போது நீர் வில்லைகள் விரைவாக ஒடுங்கிவிடுகிறது.இச்செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் போது நன்னீர் வில்லைகள் விரைவாககுறைந்து விடுவதும் மட்டுமல்லாமல் இதனால் ஏற்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு கடல் நீர் உட்புகுந்து விடும் நன்னீருடன் கடல் நீர் கலப்பதால் பல நன்னீர் கிணறுகள் உவர்நீராகமாறியுள்ளது கடற் கரையை அடுத்துள்ள பிரதேசங்களில் 1960 ஆண்டுகளுக்கு முன் நன்னீர் கிணறுகளாக இருந்தவை இன்று உவர் நீர் கிணறுகளாக மாறியுள்ளதை அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதனால் நன்னீர் (குடிநீர்) பெறுவதற்கு தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் குடா நாட்டில் சனத்தொகை அதிகரிப்பினாலும், விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நன்னீர் தேவை வருடா வருடம் அதிகரித்து வந்துள்ளது எமது தேவைகள் அதிகரித்த அளவுக்கு அமைய மழைநீர் தரைக்கீழ் சேமிக்கப்படவில்லை தரைக்கீழ் உட்செலுத்தப்படும் நீரின் அளவிற்கும் தரைக்கீழ் வெளியேற்றப்பட்டமைக்கும் சமநிலை (EQULIBRIOM) ஏற்பட்டமையினால் கடல் நீர் நன்னீர் வில்லைகளுள் உட்புகுந்து கலப்பதற்கான வழிகளாக அமைந்துள்ளது. யாழ்குடா நாட்டில் எதிர்காலத்தில் நீர்ப்பிரச்சனை அதிகமாக இருக்கும் என்பதை வெளிநாட்டு உள்நாட்டு நீரியல் வல்லுனர்களின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பிரச்சனை தீவிரம் அடையும்போது இங்கு வாழும் மக்கள் அதிகம் பாதிக்கப்படுவர். பலர் குடிநீர்பெறுவதற்காக பலமைல் தூரம் அலைய வேண்டிய நிலை ஏற்படும். எனவே இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு தேசிய ரீதியிலும் மற்றும் ஒவ்வொரு குடியானவனும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

## நீர்ப்பிரச்சனையை தீர்ப்பதற்கான வழிகள் :-

01. மழைமூலம் கிடைக்கும் நீரை வழிந்து ஓட விடாது வளவுகள், தோட்டங்கள், தரிசு நிலங்களின் எல்லைகளில் மண்வரம்புகள் அமைத்துநீரை தேக்கி வைத்தல்.

02. சரிவான நிலங்களில் முக்கியமாக தென்னம் தோட்டங்களில் சம உயர கோட்டு முறையில் கான்கள் அமைத்து (CONTOUR LOCK AND SPILLDRAIN) நீரை சேமித்தல் மண்வரம்புகள் அமைத்தல்.

03. தரிசுக்காணிகளிலும், தென்னை, மா, பலா, பனை போன்ற பல்லாண்டுப் பயிர்கள் உள்ள இடத்தில்துரவுகள் அமைத்து கூடிய மழைநீரை தேக்கி வைத்தல்.

04. மண்ணின் மேற்பரப்பில் இருந்து ஆவியாதலை தடுப்பதற்கு கூடிய சேதன பசளைகளை பிரயோகித்தலும் நிலங்களை தரிசாக விடாமல் பயிர் செய்கையை மேற்கொள்ளுதல்.

05. காடுகள், பெருமரங்கள்வெட்டுதல் குறைக்கப்படுதலும், புதிதாக காட்டு மரங்கள் நடுதல்.

06. நம் முன்னோர்களால் மழைநீரை சேமிப்பதற்காக அமைக்கப்பட்டு இன்று பாழ் அடைந்த நிலையில் உள்ள குளங்கள், கேணிகளை புனர் அமைத்தல்.

07. விவசாயிகளை சரியானநீர் முகாமைத்துவத்தை பேணுமாறு அறிவுறுத்தல்,

08. நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலம் தொடர்ச்சியாக நீர்ப்பாசனம் செய்யாது 2-3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் நிப்பாட்டப்பட்டு கிணற்றில் முன்பு இருந்த நிலைக்கு நீர் வந்த பின் நீர்ப்பாசனத்தை

தொடர்ந்து மேற் கொள்ளுதல்.

09. அதிக வெப்பம் உள்ள மத்தியான நேரங்களில் நீர்ப்பாசனத்தை தவிர்த்தல்.

10. மக்களுக்கு நீரின் பெறுமதியையும் அதனை சிக்கனமாக பாவிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தல்.

11. கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் பாறைகள் அகழ்ந்து எடுத்தல், மணல் அள்ளுதல்போன்றவற்றை தடை செய்தல்.

12. மழை காலங்களில் நீர்வழிந்தோடும் இயற்கை வடிகால்கள், நீர்வழி வாய்க்கால்களுக்கு குறுக்கே தடை அணைகள் (CHECK-DAMS) அமைத்து நீரின் ஓடும் வேகத்தை குறைத்தல், நீரை தேக்கி வைத்தல்.

13. தேசிய ரீதியில் மழை நீரைசேமிப்பதற்கான யாழ்ப்பாண கடல் ஏரித் திட்டம் உவர் நீரை நன்னீராக மாற்றும் திட்டம் துரிதநீர்வள மேம்பாட்டுத்திட்டம் போன்ற பாரிய திட்டங்களை வகுத்து செயல்படுத்தல்.

குளப்புனரமைப்பு, புதிய நீர்த்தேக்கம் உருவாக்கல், நீரற்ற இடத்திற்கு கூடுதல் மழைவிழும் நீரை கொண்டு செல்லல் இந்நாட்டு மக்கள் வளமுடன் ஆரோக்கியமாக இம்மண்ணில் தொடர்ந்து வாழ அனைவரும் ஒன்றிணைந்து மழைநீரை சேமிப்பதற்கு உறுதிபூணுவோமாக

இந்தவகையிலே கடந்த காலங்களில் நீர்நிலைகள் கவனிக்காது விடப்பட்ட போதும் இந்நிலை தொடர்ந்து எமது தமிழீழப் பிரதேசத்தில் நீடிக்கக்கூடாது. என்பதற்காக த பொ. மே. நி. உட்கட்டுமானப்பகுதி துரிதநீர்வள மேம்பாட்டுத் திட்டம் என்பதனை முன்வைத்து அதன்படி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கிணங்கவே பராமரிப்பற்று பாவனை குறைந்து காணப்படுகின்ற நீர் நிலைகளையெல்லாம் பராமரித்து பாதுகாக்கும் நோக்குடன் இருபதுவருடங்களில் செய்யும் வேலையைச் சகல வளங்களையும் ஒருமுகப்படுத்தி ஒரு துரிதநீர்வள அபிவிருத்தித் திட்டமாக்கி, 5 வருடங்களுக்குள் செயல்படுத்த எண்ணியுள்ளது. இத்திட்டமானது மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் முதல் கட்டம் ஒரு வருடம் ஏனைய இரண்டு கட்டமும் நான்கு வருடங்களும் கொண்டது இவ்வாறாக நாம் நீர்வள திட்டங்களை முன்வைக்கின்ற போதும் நீர்வளத்தைப் பாதுகாக்க முடியும்.

## காணி பகிர்ந்தளிப்பு

வவுனியாக் கோட்டம் புளியங்குளத்திலுள்ள விளாத்திக்குளம் புனரமைப்பு வேலைகளில் முன்னின்று பங்களித்த முத்துமாரி அம்மன் நகரைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப்பகுதியினரால் ஒரு விவசாயிக்கு தலா 1 ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்ட இக்காணிகளில் 1994/95 காலபோக செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மா நகர சபை

# ஆதாரம்

ஈழத் தமிழ் நாட்டினிலே ஒரு பனாட்டு.
அது அன்றுமுதல் இன்றுவரை
பனம்உணவின் பெருமைக்கோர்
எடுத்துக்காட்டு. பனங்களியால்
செய்துவரும் பனாட்டு அதனைத் தினம்
விரும்பி உண்ணவேண்டும். பனம்பழம்
ஒரு காலத்திலே கிடைக்கும்.
அதனைத் தினம்சேகரித்தால் மிக
லாபம் படைக்கும்.
அன்புத்தம்பி தங்கைகளே உயரமாகப்




பரண் ஒன்று கட்டி. அதன்மேல்
ஒழுங்காய்ப் பனம்பாய் விரிப்பீர் தட்டி,
பனம்பழத்தைப் பக்குவமாய் எடுத்து,
பாங்குடனே அதன்தோலை உரித்து,
நீர்கொஞ்சம் தெளித்துக் கையாற்
பிசைந்து நித்தம் களி சேர்க்கலாம்.
அரிதட்டில் களியை ஊற்றித் தேய்த்தே
அதன்தும்பை விலக்கிடவேண்டும்.
பனங்களியைப் பாயினிலே பதமாகும்வரை
வெய்யிலிலே போடவேண்டும்.
படைபடையாக பரவிக் களி ஊற்றி
அது பக்குவமாய்க் காய்ந்ததும்
பனாட்டு.
ருசித்தவர்களின் வாயினில் நீரூறும்.
அதனைப் பசிக்கும் உணவாக்கிடலாம்.
பனாட்டினை உண்டு பலகாலம்
வாழ்ந்த தமிழர்கள் இந்த நாட்டில்
இருந்ததுண்டு. அதனை நாமும்
அறிந்ததுண்டு
கன்டோசை நாங்கள் கண்டது எப்போது?
கனகாசு கொடுத்து அதை வாங்கி
உண்ணுகிறோமே இப்போது. கருத்துச்
சிவந்திருக்கும் எங்கள் பனாட்டுக்கு
அது ஈடாகுமா? இதை ருசிக்க
ஏராளம் பணம் செலவழிக்கவேண்டுமா?
எசன்ஸ் இல்லை.
ஏராளம் சீனி இல்லை.
எங்கேயோ இருந்துவரும் கொக்கோ
இல்லை,
பனாட்டுக்கோ. தனியான
மணம் உண்டு. சுவையுண்டு
தரணியிலே இதற்குநிகர் ஏது உண்டு.
மூடிக்கிடக்கும் ஈயக்கடதாசியின்
அழகுதான் எங்களை
முட்டாள்களாக்குகிறதா?
முடங்கிக்கிடக்கும் எசன்சின் மணம்
தான் எங்கள் மூக்கைத் துளைக்கிறதா?
வேண்டாம் வேண்டாம் இது.
வீணான ஆசைகளை நிறுத்தி எங்கள்
வீரமண்ணின் வளத்தில் அன்பைப்
பொருத்தி சீராக உண்டிடுவோம்
பனாட்டு.
அது சிறப்பளிக்கும் அறிவீர்
இதைக் கேட்டு.
கன்டோசுக்குப் பதிலாய்ப் பனாட்டு
அதனை உண்டவர்கள் வாங்கிடுவார்
கேட்டு.
ரோபிகளுக்குப் பதில் பனாட்டு உண்பீர்.
இந்தப் புவியினிலே
பனை வளர்ப்போம் என்பீர். □□

## பனாட்டு

ந. சிதம்பரேஸ்வரன்

# ஆதாரம்

பிழையான பீடை கொல்லிகளின் பாவனையின் விளைவுகள் உள்நாட்டு உற்பத்திக்கு பாதகமானதாகவும் அதே வேளை இறக்குமதி செய்யப்படும் பொருட்களிலேயே பெரிதும் நம்பியும், தங்கியும் இருக்கச்செய்துள்ளது.. கமக்காரனின் இலாபம் உண்மையாகவும் தொடர் தேர்ச்சியாகவும் குறைந்துள்ளது. ஆனால் நுகர்வோர் நஞ்சூட்டப்பட்ட நுகர்ச்சியில் பொருட்களுக்கு கூடிய பணம் செலுத்துகின்றனர்.

இருபது வருடங்களாக பரவலாக பயன்படுத்தப்பட்ட பூச்சிநாசினிகள், பூச்சிகளை கொல்வதற்குப் பதிலாக பூச்சிகளின் இயற்கை எதிரிகளை இல்லாமல் செய்தன. மனிதனுக்கும் சூழலுக்கும் நஞ்சினை வெளிப்படுத்துவதாக நிரூபிக்கப்பட்ட பீடைநாசினிகளுக்கு முழுமையாக பீடைநாசினி பதிவாளர் தடைவிதித்திருப்பதும் மகிழ்ச்சிக்கு உரியது இதன் தொழிற்பாட்டின் போது, மட்டுப்படுத்துவதும் இறக்குமதியை சுருக்கிக் கொள்வதும் பாதுகாப்பான பிரதியீடுகளை அனுமதிப்பதும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ முறையை சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்வதுமாகும்.

ஆதாரம்

# யாழ் மாவட்டத்தில் விவசாய பீடை நாசினிகளின் தாக்கம்

**க. விஜயரத்தினம்**

செயற்கையான பீடை நாசினிகளை கண்டு பிடிப்பதற்கு முன்னர், நடைபெற்ற விவசாய முறைகளை அறிதல் பிரச்சனையை இனங்கான பயனுடையதாகும்.

நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் இருந்து, அறுவடையை களஞ்சியப்படுத்தும் வரை கைக்கொண்ட பழைய அமைதியான முறைகளை புத்தக ரூபமாக தொகுப்பது எதிர்கால சுபிட்சத்துக்கு வழிவகுக்கும்.

இன்று புகழ் பெற்ற கத்தரி பாவல் இனங்களை புத்திசாலிகளான பழைய கமக்காரர் தெரிவு செய்திருந்தனர். நவீன ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவதத்துவம் அவர்களின் பெறுமதி மிக்க பழைய பாரம் பரியங்களின் ஒரு பகுதியாகும்.

கடந்த குறுகிய மூன்று தசாப்தங்களுள் குறுகிய காலத்தில் கூடிய தொகையான உற்பத்தி வளர்ச்சியில் குறுகிய மனப்பான்மையுடன் கவனம் செலுத்தி சூழலுடன் இயைபு பட்ட நீண்டகால அபிவிருத்தியில் இருந்து விலகி விட்டோம்.

முன்பு முக்கியத்துவம் இன்றி இருந்த பல பூச்சிகள் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் பிரதான பூச்சி அந்தஸ்தை அடைந்துள்ளன. பீடை நாசினிகளுக்கும் பல எதிர்ப்பு தெரிவிக்கின்றன. ஏற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கையினுள் இரசாயன கட்டுப்பாட்டு முறை பொருத்தமற்றதாகின்றது. ஒருவர் உட்கொள்கின்ற பீடை நாசினி அளவில் யாழ்மாவட்டம் மிக உயர்ந்ததாக உள்ளது.

1977ல் வெங்காயப்பயிரை தாள் கோதி புழு முற்றாக அழித்த போது அக்காலத்தில் இருந்த பீடை நாசினிகளால் திருப்திகரமாக கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்புழு மற்றைய பயிர்களுக்கும் பரவியது. இப்புழு அறிமுகப்படுத்தப்பட்டதா? தொற்றாகப்பரவியதா? என்று இன்றுவரை தெரியாதுள்ளது. இந்த புழுவை கட்டுப்படுத்த முன் ஒருபோதும் பாவிக்கப்படாத, பயிறிதிரோயிட் (PYRETHROID) சேர்ந்த பீடை நாசினி அவசரமாக இறக்குமதி செய்யப்பட்டது. இப்பீடை நாசினியின் சாதகமான குணாதிசயங்கள் மெச்சத்தக்கன ஆனால் இதன் பாவனை இறுக்கமாக கட்டுப்படுத்தப்படவேண்டியது.

இந்த நாசினி விசிறும் போது எதிர்ப்புதன்மையை சீக்கிரத்தில் உண்டு பண்ணுவதனையும், பெரும் எண்ணிக்கையில் பீடை பெருக்கம் பெருகுவதையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்பூச்சிநாசினிகள் பூச்சி பீடைகளின் இயற்கை எதிரிகளுக்கு கேடு விளைவிப்பவை என அவதானிக்கப்பட்டுள்ளது. இவைகள் தேன் குளவிகளுக்கும் மீன்களுக்கும் ஏனைய நீர்வாழ் நுண் உயிர்களுக்கும் அதிகூடிய நஞ்சுடையவை.

வெங்காயத்துக்கும் பருத்திக்கும் என மட்டுப்படுத்தப்பட்ட இந் நாசினி பல்வேறு பயிர்களுக்கும் பாவிக்கப்படுகின்றது.

எதிர்ப்புத்தன்மை கவலை தரும் வேகத்தில் அதிகரித்து வருகின்றது பீடைகளை கட்டுப்படுத்த அதிகளவு அடர்த்தியில் இரசாயனத்தை பாவிக்கவேண்டி உள்ளது

எமது பிரதேசத்தில் முதலாம் தர மரக்கறி பயிரான கத்தரியில் பிரதான பீடை ''பலூசி நோட்ள் ஒவனாளிசிஸ்'' என்ற. தண்டு, காய் துளைப்பானாகும். இன்று இந்த பூச்சியை நுகர்வோருக்கும் சூழலுக்கும் பாதுகாப்பாக முகாமைப்படுத்த முடியாமல் உள்ளது.

அத்துடன் விமேசியா, ஒபக்கை' என்ற வெண் ஈயும்''எம் போள்க்காடிவாங்ரன்ஸ்'' என்ற பச்சை தத்தியும் முக்கிய பீடைகளின் இடத்தை பிடித்துள்ளன. பௌதீக காயங்களை உண்டாக்கியும், பயிரை முற்றாக பாதிக்கும் சிற்றிலை வைரஸ் நோய் போன்றவற்றை பரப்பியும், பல பயிர்களை தாக்கும் கொடிய பீடைகளாக இவை உள்ளன.

இலை சுரங்க மறுப்பி பூச்சி பல்வேறு பயிர்களை தாக்குவதன் மூலம் தன்னை நிலை நிறுத்தியுள்ளது.

இந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள கமக்காரன் சீக்கிரம் உதவக் கூடிய பீடை நாசினியை தஞ்சமடைகிறான்.

தற்போது பூச்சி வளர்ச்சியை கட்டுப்படுத்தும் இரு நாசினிகள் அறிமுகமாயின. இவை சிற்றின் கவச உற்பத்தியை தடுப்பதன் மூலம் பூச்சிகளை கொல்லுகின்றன. இவை தெரிந்து தாக்குவதனால், பூச்சி பீடைகளை முகாமைப்படுத்தும் திட்டத்துக்கு மிகவும் பொருத்தமானது.

இவை சிந்தனையை தூண்டுவதாக உள்ளன. செழிப்புடன் இருந்த மிளகாய் செய்கைக்கு நடந்த விதியை மற்றய பயிர்களுக்கும் தொடர விடலாமா? சிந்தியுங்கள்.

பிழையான பீடை கொல்லிகளின் பாவனையின் விளைவுகள் உள்நாட்டு உற்பத்திக்கு பாதகமானதாகவும் அதே வேளை இறக்குமதி செய்யப்படும் பொருட்களிலேயே பெரிதும் நம்பியும், தங்கியும், இருக்கச் செய்துள்ளது.

கமக்காரனின் இலாபம் உண்மையாகவும் தொடர் தேர்ச்சியாகவும் குறைந்துள்ளது. ஆனால் நுகர்வோர் நஞ்சூட்டப்பட்ட

நுகர்ச்சியில் பொருட்களுக்கு கூடிய பணம் செலுத்துகின்றனர்.

பூச்சிகளின் எதிர்ப்பு தன்மையை ஆராயும் போது இவை பூச்சிகளின் நிறமூர்த்தத்தில் தொடர் தேர்ச்சியாக அதிகரித்துள்ளது. எடுக்கக்கூடிய மாற்றங்கள் எதிர்ப்புத்தன்மையான நிறமூர்த்த இடைவெளியை குறைக்க உதவுமே தவிர, ஆனால் அவை எப்போதும் இருக்கும். அதேவேளை எதிர்க்கும் இனம் தாழ்ந்து விடக்கூடும்.

"கெலிக்கோ வெப்பர்" ஆமிஜினா என்ற மயிர் கொட்டி புழு எல்லா பயிர்களையும் தாக்குகின்றது. இது உலகிலேயே பயிர்களை சேதப்படுத்தும் ஒரு முக்கிய பீடையாகும். ஆனால் அதிஸ்ட வசமாக யாழ்ப்பாணத்தில் முகாமைப்படுத்தும் மட்டத்துக்கு மேல் இது அதிகரிக்காமல் இருக்கின்றது.

குறிப்பாக திராட்சை செய்கையில் தலைக்குமேல் விசிறுகின்ற படியால் பாதுகாப்பான உடை அணிய வேண்டிய தேவை கவனம் பெற்றது. ஆனால் பாரதூரமாக முன் எடுக்கப்படவில்லை. விசிறும் போதும், விசிறிய பின்பும், தொழிலாளரிலும், மண்ணிலும், தரையிலும், பயிரிலும், மிஞ்சும். நஞ்சு முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும. இதே போன்று விசிறிய பயிரினுள் குறிப்பாக, வயோதிபர் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், நோயாளிகள் செல்வது தடை செய்யப்படவேண்டும் நாசினிகளுடன் பழகுபவர்களின் கையாழுபவர்களின் விசிறுபவர்களின் மேல் சிறிது கவனமெடுப்பதும் அவசியமாகும்.

பீடை நாசினி விசிறிய பின்னர் அதன் நஞ்சு மட்டம் அனுமதிக்கப்பட்ட மட்டத்தின் கீழ் வருமட்டும், அறுவடை செய்யக்கூடாது. இந்த இடைவெளி, கடைப்பிடிக்கப்படுவதில்லை. குறிப்பாக காய்கறி பயிர்களில், வெண்டி, கத்தரி,பயத்தை, தக்காளி, கீரை ஆகிய பயிர்களில்' இது சரியாக கடைப்பிடிக்கப்படுவதில்லை.

என்ன பிழை?

கமக்காரர் பீடை நாசினிகளை துஷ்பிரயோகம் செய்வது இயற்கையின் சமநிலை தொழிற்பாட்டை பாதிப்படைய செய்வதுடன், அனுமதிக்கப்பட்ட மட்டத்துக்கு அதிகமாக, தங்கியுள்ள, நஞ்சுடைய உற்பத்தி பொருட்களை ஒன்றும் அறியாத நுகர்வோர் உட்கொள்வதனால், இதன் பலாபலன்கள், புற்று நோய் வரையான ஆபத்தான நோய்க்கு காரணமாக அமைகின்றன.

இதற்கு எல்லா மட்டத்திலும் போதிய விழிப்புணர்ச்சி இல்லாமையும், கூடிய கெதியில் குறுகிய வழியில் பணம் சம்பாதிக்கும் நோக்கமும் காரணம் எனலாம்.

அடுத்தது என்ன?

மனிதன் உணவுடன் மட்டும் உயிர் வாழ்வதில்லை. உணவுக்கும் ஆரோக்கியத்துக்கும் பொருளாதாரத்துக்கும் சூழலுக்கும் இடையே ஏற்படுத்தக்கூடிய ஒரு தன்னலமற்ற போக்குத்தான் இன்றைய தேவையாகும். ஒன்றில் இன்று தங்கியுள்ள கடமைகளை ஒதுக்கிவிட்டு தனிமையாக பிரச்சனையை தீர்க்கமுடியாது. விவசாயிகளும், பொருளியலாளர்களும் பீடைநாசினி உற்பத்தியாளர்களும் சூழல் பாதுகாப்பாளர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே இப்பிரச்சனையை தீர்க்க முடியும்.

# ஆதாரம்

விவசாயம் வைத்தியம், சூழல் பொருளியல் சார்ந்தவர்களுக்கு, பீடைநாசினிகளின் பெறுமதி தீமைகள் நன்மைகள் பின்னடைவுகள் போன்றவற்றை தெளிவாக விளக்க வேண்டும். இதற்காக இவர்களை ஒருங்கிணைத்து கல்வியையும் பயிற்சியையும் வழங்க வேண்டும்.

பீடைகட்டுப்பாடு, பீடை அழிப்பு தத்துவங்களின் மீளாய்வு, ஆலோசனைகளும், செயலிழப்புகளும், புனர் நிர்மானங்களும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்துக்கு வழிசமைத்தன.

பூச்சி பீடைகளின் இயற்கை எதிரிகளை தரம்கண்டு அவற்றினை பிரயோகித்தும் (ஒட்டுண்ணிகள் ஊண் சூறையாடிகள் நோய்பரப்பும் நுண் உயிர்க்கிருமிகள்) நடைமுறையில் உள்ள பண்பாட்டு முறைகளை உள் இணைத்தும், பயிர் செய்கை முறைகளை கையாண்டும், பீடைகளின் பெருக்கத்துக்கு ஊக்குவிக்காத அவற்றினால் புறக்கணிக்கப்படக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்துதலை இது கருதுவதாகும் பொருளாதார மட்டத்தை அடைந்த பின்னர் இறுதியாக குறைந்த அளவு பீடை நாசினியை பாவிப்பதாகும்.

இது தற்போது கைக்கொள்ளக்கூடிய ஒரு குறிக்கோளே அன்றி பீடைகளை அழிக்கும் ஒரு திட்டம் அல்ல ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மட்டத்தில் பீடையின் எண்ணிக்கையை குறைத்து வைத்திருப்பதற்கும் பீடைநாசினி தேவைப்படும் போது மட்டும் அதிகம் இணையக்கூடியதாக விசிறப்படுதலையும் உள்ளடக்கியதாகும், இயற்கையாகவே மட்டுப்படுத்தும் முறையுடன் இருப்பதனால் இது அதிகம் பாதுகாப்பானதும் அழிவினைக் குறைக்க கூடியதுமாகும்.

உண்மையில் இத்திட்டம் மிகவும் நவீனமானதும் நெகிழும் தன்மையானதும் விஞ்ஞானரீதியானதும், எமது பிரதேச பயிர் பீடைகளை முகாமைப்படுத்தக் கூடியதுமாகும்.

இது பீடைகளை கண்டறிதல் அவற்றின் விளைவுகளை மதிப்பிடுதல், எதிர்வு கூறல் என்பவற்றை உள்ளடக்கிய பயிற்சியை இத்துடன் தொடர்புடையவர்களுக்கு வழங்குவதிலேயே தங்கியுள்ளது.

பயிர்களுக்கு வழமையாகவிசிறும் முறைகளிலிருந்து பொருளாதார மட்டத்துக்கு முன்னேற வேண்டும். பொருளாதார மட்டம் என்பது வித்தை காட்டும் எண்ணங்களோ, அட்சரகணித எண்களோ அல்ல. கமக்காரனின் வயலில் விசாலமான பரப்பில் செய்யப்படும் செயல் விளக்கபாத்திகளே இதைக் காட்ட பிரயோசனமுள்ளவை என்பது நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இத்துடன் பூச்சிகளின் இயல்பும், அவற்றின் எண்ணிக்கையின் இயல்பும் அறிந்திருக்க வேண்டும் இறுதியாக, பீடைநாசினிகளை வினைத்திறனாக பாவிப்பதனால் உற்பத்தி செலவினை குறைப்பதுடன், சூழல் பாதிப்படைவதை குறைத்துக் கொள்ளலாம். இதில் அறிவு செறிந்த முறைகளே, செலவு கூடிய முறைகளை கைப்பற்றும்.

கடைசியாக பீடைநாசினி உற்பத்தியாளர்கள் பீடைநாசினியையும் அதன் கட்டுமானத்தையும், அவற்றை முகாமைப்படுத்த ஏற்ற தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதுடன், ஒரு வரையறுக்கப்பட்ட பங்களிப்பு செய்தல் அவசியமாகும்.

## ஆராய்ச்சித் தேவைகள்

1) உள்ளூர் இயற்கை எதிரிகளை சேர்த்துக் கிபார்த்தலும் அவற்றினை பயன்படுத்தலுக்குமான ஆய்வுகளும் வெளிப்படுத்தலும்

2) உகந்த பயிரிடும் முறைகளையும், பண்பாட்டு முறைகளையும் இனங்காணலும், வெளிப்படுத்தலும்.

3) பீடைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்ககூடிய பயிர் பிறப்பாக்கம்

4) உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற பொருளாதார மட்டங்களை சீர்செய்தல்

5) புதிய உயிரியல் முறைகளை அடையாளம் காணுதல்

6) அனுகூலமான பீடைநாசினிகளை இனம் காணல்

இம்மாவட்டத்தில் நான்பெற்ற அனுபவங்களில் இருந்து பணப்பயிர்களில் பாவிக்கப்படும் பீடைநாசினிகளை மூன்று பங்கில் இருந்து இரண்டுபங்காக குறைக்க முடியும் இது பிரச்சனையை சரியாக இனங்காணுவதன் மூலமும் தொழிற்பாட்டை அதிகரிக்க செய்வதன் மூலமும், அழிவுகளை குறைத்தும் உரியபீடைநாசினியை உபயோகப்படுத்தியும் சாத்தியமாக்க முடியும்

## ஊக்கப்படுத்தக் கூடியன

1) தோய வார்க்கும் விசிறுதலுக்கு எதிராக நுண்ணிய துளிகளின் பருமனை ஊக்குவித்தல் (தெளிகருவியினதும் தெளித்தல் உபகரணங்களினதும் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் இது சாத்தியப்படலாம்)

2) மாலையில் விசிறுதல் — இது முடியாவிட்டால் அதிகாலையில் விசிறுதல் (மதிய வேளையில் விசிறுவது தவிர்க்கப்பட வேண்டும் ஏனென்றால் பூச்சிகள் வாழ்விடங்களிலிருந்து மாலையிலேயே வெளிவருகின்றன. அது மட்டுமல்ல, நாசினிகளும் சூரிய வெளிச்சத்தால் சிதைவடைகின்றன)

3) நாசினிகளை சரியான அளவிலும், நிறையிலும் பாவித்தல் (பொதுவாக போத்தல் மூடிகளிலும், நெருப்பு பெட்டிகளிலும் அளக்கப்படுகின்றது)

## ஊக்கப்படுத்தாத விடயங்கள்

1) விசிறிய தாங்கிகணக்குக்கு சம்பளம் கொடுக்கும் கூலிக்கு விசிறுகின்ற முறை

2) கட்டுப்படுத்தும் திறன்குறையும் போது நாசினி கூடுதலாக விசிறப்படுகின்றது (செறிவை கூட்டி)

3) பீடைத்தாக்கம் இல்லாவிட்டாலும் பழக்க தோசத்தால் நாசினி விசிறப்படுகின்றது

4) பொய்யான தத்துவங்களை பின்பற்றுதல்

1. வளர்ச்சியை அதிகரிக்க பீடைநாசினியை உபயோகிக்கலாம் — இது பிழையானது

2. காய்கறிகளை பீடைநாசினிகள் வாடாமல் வைத்திருக்கின்றன இதுவும் தவறானது

## சட்டங்கள் என்னத்தை கருதுகின்றன?

நடைமுறையில் உள்ளசட்டப்படி பீடைநாசினிகளை விசிறப்பட்ட எந்த ஒரு உணவுப் பொருளையும் சந்தைப்படுத்தல் தடுக்கப்பட்டுள்ளதுடன் நாசினி விசிறப்பட்ட அந்த உணவுப் பொருள்களில் பின்தங்கி இருக்கும் இரசாயன நஞ்சுகள் வரையறை செய்யப்பட்ட மட்டத்துக்கு மேல் இருத்தல் ஆகாது.

அத்துடன் பீடைநாசினிகளுக்கு அனுமதிப்பத்திரமும் இறக்குமதியை ஒழுங்குபடுத்

தவும், பொதி செய்யவும் ஒட்டுச்சிட்டைக் கும் களஞ்சியப்படுத்தவும் உருவாக்கல் செய் யவும் எடுத்து செல்லவும் விற்பனைக்கும் உபயோகத்துக்கும் வழி இருக்கின்றன மேலும் பீடைநாசினிகளுக்கு அனுமதியளிக்க, ஓர் உரிமையாளரை நியமிக்கவும் பீடைநாசினி உருவாக்கலுக்கும் இது தொடர்பான நட வடிக்கைகளுக்கும் இடம் அளிக்கப்பட்டுள் ளது.

இம்மாவட்டத்தில் அனுமதியளிக்கும் உரிமை, உதவிவிவசாய பணிப்பாளரிடம் உள்ளது.

இந்தோனேசியா அனுபவம்

1980 களில் 10,000 தொன் பீடை நாசினிகளை உபயோகித்த இந்தோனேசியா 1984 ல் 40,000 தொன்பீடை நாசினிகளை பாவித்தது.

1986 ல் நெல்லுக்கு பயன்படும் பூச்சி நாசினிகள் 57 தடைசெய்யப்பட்டு 10 மட் டுமே அனுமதிக்கப்பட்டது கமக்காரர் பெரும் நட்டம் வருமென பீதியடைந்தனர். பீடைநாசினி உற்பத்தியாளர் இயற்கையா கவே எதிர்மறையாக தொழிற்பட்டனர். எது எப்படி இருந்த போதிலும் அரைப்பங் கான பீடைநாசினி உபயோகத்துடன் ஒரே அளவான விளைவை பெற்றனர்

இச்சந்தர்ப்பத்தில் பேசிய இந்தோனே சியா தேசிய அபிவிருத்தி அமைச்சரின் கூற்று கவனிக்கப்படக் கூடியது

இருபது வருடங்களாக பரவலாக பயன் படுத்தப்பட்ட பூச்சிநாசினிகள், பூச்சிகளை கொல்வதற்குப் பதிலாக, பூச்சிகளின் இயற் கை எதிரிகளை இல்லாமல் செய்தன. மனிதனுக்கும் சூழலுக்கும் நஞ்சினை வெளிப் படுத்துவதாக நிரூபிக்கப்பட்ட, பீடைநாசி னிகளுக்கு முழுமையாக பீடைநாசினிபதிவா ளர் தடைவிதித்திருப்பதும் மகிழ்ச்சிக்கு உரி யது இதன் தொழிற்பாட்டின் போது, மட் டுப்படுத்துவதும், இறக்குமதியை சுருக்கிக் கொள்வதும் பாதுகாப்பான பிரதியீடுகளை அனுமதிப்பதும் ஒருங்கிணைந்த பீடை முகா மைத்துவ முறையை சிறிது சிறிதாக அபி விருத்தி செய்வதுமாகும்.

இதில் கவனிக்க வேண்டியது என்ன வென்றால், ஒருங்கிணைந்த பீடை முகா மைத்துவ முறையின் ஓர் அலகான பீடை நாசினிகள் முகாமைத்துவத்துடன் ஒன்றி ணையக்கூடிய நாசினிகளை இதன் பலனாக பீடைநாசினி உற்பத்தியாளர் கமக்காரர் களுக்கு முன்வைக்க கூடியதாக இருந்தமை யாகும்.

ஆகவே ஒருங்கிணைந்த பீடை முகா மைத்துவம் வெற்றிபெற, பீடைநாசினி, முகாமைத்துவம் சட்டமூலமும் கற்பித்தல் போன்ற வேறு முறைகளும் பின் பற்றப்பட வேண்டும் நிபந்தனையற்ற பீடைநாசினி பிரயோகம் ஊக்குவிக்கப்பட்டால், ஒருங்கி ணைந்த பீடை முகாமைத்துவமுறை செல் வாக்காகிவிடும்.

## பசுமைபுரட்சிவெற்றிபெற்றதா?

கடந்த இரு தசாப்தங்களாக வளர்முக நாடுகளில் நன்கு திட்டமிட்டு பசுமைபுரட்சி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன? திட்ட மிட்டவர்கள் தங்களிலேயே தங்கியிருக்கக் கூடியதும் சூழலை மாற்றீடாக கொண்டது மான விவசாயத்தை புனர் அமைப்பு செய் தனர். இதன் எதிர்பார்ப்பு கூடிய கடன் வசதிகளையும் கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன உரங்களையும் பீடைநாசினிகளை யும் உபயோகித்தலை அடிப்படையாகக்

கொண்டது இது ஒரு சுயநிலைப்பாட்டில் தங்கி நிற்கும் தன்மையானது அல்ல. அதே வேளை பண நிலைப்பாட்டில் தங்கியிருப்பதும் அல்ல ஒரு நிலைப்பாட்டில் தங்கியுள்ளது.

உணவு உற்பத்தியை கூட்டக்கூடியதும் சூழலுக்கு அதிகம் ஒத்ததுமான கலப்புபயிர் செய்கை போன்ற பயிர்செய்கை முறைகளையும் உள்ளூர் விதைகளின் தரத்தை பயன்படுத்தாமையும் உள்ளூர் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தாமையும் போன்ற வழிகளை கைவிட்ட நிலையிலேயே பசுமை புரட்சி கட்டி எழுப்பப்பட்டது.

நான் செய்த ஆய்வுகளில் உள்ளூர் வர்க்கங்களும் பரம்பரையாக கையாண்டு வந்த கம முறைகளும் பசுமைபுரட்சி நடவடிக்கையிலும் பார்க்க அதிகரித்த விளைவை காட்டியுள்ளன. பசுமைப்புரட்சியின் அடிப்படைக்குறிக்கோள் உற்பத்தியை அதிகரிப்பதாக இருந்தாலும் வளங்களையும் சக்தியையும்கணக்கிட்டு பார்த்தால் உண்மையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

பசுமை புரட்சியின் முக்கிய ஊக்குவிப்பு இலாபமே ஆனால் நீண்ட காலத்தில் வெளிநாட்டு உள்ளீடுகளுக்கு கிராக்கி அதிகரித்தமையினால் கமக்காரருக்கு வருவாய் குறைந்தே வந்துள்ளது.

முடிவுரை;- நுகர்வோர் நச்சுத்தன்மையற்ற உணவை பெறவும் எம்மில் நாம் நல்கி நிற்கக்கூடிய விவசாயத்தை முன்னெடுக்கவும் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கும் எல்லோரும் இணைந்து கடந்த காலத்தை மதிப்பீடு செய்து ஒருங்கிணைந்து செயல்படுவதே இன்றைய தேவையாகும். □□

## நெய் உற்பத்தி

முல்லை மாவட்டத்தில் குமுழமுனை,ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில் நெய் உற்பத்தி செய்யும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேமபாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னி பெருநிலப்பரப்பில் கிடைக்கும் பாலை உச்சப் பயன்பாட்டுக்குக்கொண்டுவரும் நோக்கத்தில் பால் சந்தைப்படுத்தல், பதனிடல், சந்துபால் வெல்ல உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்களில் ஒன்றாகவே இந் நெய் உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

பொது மக்களிடமிருந்து ஒரு லீற்றர் பால் ஏழு ரூபா விலையில் கொள்வனவு செய்யப்பட்டு ஆடைபிரி கருவி மூலம் ஆடை பிரிக்கப்பட்டு ஆடை நீக்கிய பால் தகுந்த முறையில் போத்தலில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் ஆடை உருவாக்கப்பட்டு நெய்யாக்கப்படுகிறது.

இந் நடவடிக்கையின் மூலம் பால் உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதுடன் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

# தமிழீழத்தின் கிழக்குக் கரையோரம் குவிந்து கிடக்கும் கண்ணாடி மணல்

**தமிழீழத்தின் கிழக்கு கரையோரம்
வங்காள விரிகுடாவில் வீசுகின்ற பருவக்காற்று
மணலை வாரிக்குவித்துக் கொண்டு தான் இருக்கிறது.**

வட தமிழீழத்தின் கிழக்கு கரையோரம் வல்லிபுரம் பிரதேசத்தில் குவிந்து கிடக்கும் மணல் கண்ணாடி தயாரிப்பதற்கான மூலக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. என (1920ம் ஆண்டில்) பிரித்தானியா தேசத்து கம்பீரியல் நிறுவனம் இரசாயன பகுப்பாய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளது. பருத்தித்துறை அம்பன் வீதிக்கு வடகிழக்கே 4/3 மைல் தூரத்தில் தொடராக மணற் குன்றுகள் குவிந்து நீண்டுள்ளன. வடக்கே வல்லிபுரத்திலிருந்து அம்பன் பிரதேசத்தை உள்ளடக்கி தெற்கே நாகர் கோவில் வரை மணற்குன்றுகளின் தொடர் நீளுகின்றன. நன்கு திரண்டு குவிந்த மணற்குன்றுகள் 24 அடியிலிருந்து 50 அடி வரை உயரத்தைக் கொண்டுள்ளது. இத்தகைய உயர்ந்த மணற் குன்றுகள் குடத்தனைக்கு கிழக்கே காணப் படுகின்றன. ஏனைய பிரதேசங்களில் உயரத்தில் குறைந்து 8 அடியிலிருந்து 15 அடி வரை உயரத்தைக் கொண்ட குன்றுகள் பரந்துள்ளன. இந்த மணற்குன்றுகளுக்கு இடைப்பட்ட நிலங்களும், படிகமணலால் மூடிக் கிடக்கின்றன.

**அச்சுவேலி தொழிற்பேட்டையில்
கண்ணாடித் தொழிற்சாலைக்காக நிர்மாணிக்கப்பட்ட
புகைபோக்கி இன்னமும்
உயர்ந்து தான் நிற்கின்றது.
அமையப்போகும் சுதந்திர தமிழீழத்தில் இது
நிச்சயம் உயிர்பெறும்**

# ஆதாரம்

வங்காள விரிகுடாவின் கரையோரங்களான இந்தப் பிரதேசங்களில் பருவக்காற்று மண்ணை குவித்த வண்ணம் இருக்கின்றது. எக்காலத்தும், குறைவின்றி இந்தப் பிரதேசங்களில் மணல் குவிந்த வண்ணமேயிருக்கும் ஏக்கருக்கு ஒரு அடி ஆழ மணல் 3200 தொன்களைக் கொண்டிருக்கும் எனக் கணிக்கப்படுகின்றது மிக பிரமாண்டமான அளவில் மணல் இங்கே குவிந்துள்ளது.

ஆண்டொன்றுக்கு நாலாயிரம் தொன் வீதம் 100 ஆண்டுகள் தொடர்ந்து கண்ணாடி உற்பத்திக்கான மூலவளம் இங்கே நிறைந்துள்ளது.

கள் அக்கறை செலுத்தினார்கள். இத்தனை மணல் மூலக்கூறுகளையும் தாங்கள் சேர்த்து அள்ளிச் செலலும் சாத்தியம் இருக்கவில்லை.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கை அரசாங்கங்களும் தமிழர் பிரதேசங்களில் தொழிற்துறைகளை மேம்படுத்துவதில் அக்கறையற்றே இருந்தார்கள்.

1920 ம் ஆண்டில் தொழிற்துறைக் கான சாத்தியங்கள் பற்றிய பிரித்தானியர் களது மூலவள ஆய்வின் போது மட்டுமல்ல, இன்னமும் தமிழீழத்தின் கிழக்கு கரையோரமாகும். வங்காள விரிகுடாவில் வீசுகின்ற

## *ANALYSIS OF POINT PEDRO SAND*

| | | |
|---|---|---|
| *Silica* | 97.48 | *Percent* |
| *Alumina* | 0.17 | ,, |
| *Ferric Oxide* | 0.15 | ,, |
| *Titanic Oxide* | 0.05 | ,, |
| *Zirconio* | 0.006 | ,, |
| *Lime* | 0.27 | ,, |
| *Magnesia* | 0.17 | ,, |
| *Potash* | 0.60 | ,, |
| *Soda* | 0.26 | ,, |
| *Soss Onigllition* | 0.57 | |

*BULLETTIN IMPERIAL INSTITUTE*
*VOL XV lll NO - 1*
*PGE 176 - 189*
*APRIL - JUNE - 1920*

பிரித்தானியா ஆட்சியாளர்கள் 1920ம் ஆண்டுகளிலேயே மூலவள ஆய்வினை மேற்கொண்டிருந்தார்கள். மூலவளங்களைக் கொண்டு தேசிய தொழிற்துறைகளை வளர்ப்பதில் அவர்களுடைய அக்கறை இருக்கவில்லை. காலனி நாடுகளின் மூலவளங்களை தமது தேசத்து தொழிற்துறை வளர்ச்சிக்கும் பயன்படுத்துவதிலேயே அவர்

பருவக்காற்று மணலை வாரிக்குவித்துக் கொண்டுதான் இருக்கின்றது. குவியும் மணல் திட்டுக்களாகி நகர்கின்றன. இணைந்து பெரும் மணல் மலைகளாகக் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

வட கீழ் கரையோரமாக குவிகின்ற இந்த மணலில் கண்ணாடி செய்யலாம்

# ஆதாரம்

இது காலம் காலமாக பேச்சளவிலிருக்கும் ஒரு செய்தி. இது வெறும் கண்பார்வை யல்ல. ஒரு குறுகிய காலத்திற்கேனும் தென் தமிழீழத்துக் கரையோரம் புல்மோட்டையில் நடைமுறையில் இருந்த கண்ணாடி உற்பத்தி முயற்சிகள் நம்பிக்கைகளை மேலும் வலுப்படுத்துகின்றன. தமிழீழத்தின் தொழிற்துறை வளம் பற்றிய மிதமிஞ்சிய எண்ணங்களுமல்ல என்பதையும் இவை நிரூபணப்படுத்துகின்றன.

1978ம் ஆண்டில் இது நிரூபணமாகும் நிலை தோன்றியது. நாளொன்றுக்கு 60000 கண்ணாடிப் பொருட்களை உற்பத்தி செய்யும் இயல் திறனைக் கொண்ட பாரிய தொழிற்சாலை அச்சுவேலித் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டது. 3.2 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு பொருத்தப்பட்டன. (*PROJECTREPORT - RAYO GLASS LID*) இந்தியாவிலிருந்து பொறியியளாளர்கள் வரவழைக்கப்பட்டு சூளைகளும் நிருமானிக்கப்பட்டன. சகல கட்டுமானப்பணிகளும் நிறைவுற்றன. சீமெந்து ஆலைக்கு அடுத்ததாக மிகப் பாரிய தொழிற்துறை ஒன்று தமிழீழத்தில் அமைய இருந்த அந்த வாய்ப்பை நாங்கள் இழந்து விட்டோம். காலங்காலமாக தொடருகின்ற இன ஒழிப்பு நடவடிக்கைகள் அது பல்வேறு வடிவங்களில் எங்களது சமூக பொருளாதார நடவடிக்கைகளையும், சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றது.

அச்சுவேலி தொழிற்பேட்டையில், கண்ணாடித் தொழிற்சாலைக்காக நிருமாணிக்கப்பட்ட புகை போக்கி இன்னமும் உயர்ந்து நிற்கின்றது. அமையப்போகும் சுதந்திர தமிழீழத்தில் இது நிச்சயம் உயிர் பெறும். உயிர் பெற்று இதன் நாசித்துவாரங்களிலிருந்து மூச்சுக்காற்று வெளிவரும். □□

## கால் நடைகளுக்கான தடுப்பூசி

யாழ் குடா நாட்டில் கால் நடை வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கால் நடைகளுக்கான தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பருவ கால மழையுடன் மாடுகளை தாக்கும் தொண்டை அடைப்பான் நோயினை கட்டுப்படுத்த இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் உள்ள மாசேரி, தம்பகாமம், மந்துவில் கிழக்கு, இடைக்குறிச்சி, முல்லையடி, பளை, கிளாலி, அல்லிப்பளை, தனங்கிளப்பு, மறவன்புலோ, கோயிலிககண்டி, நாவற்குழி மேற்கு, கொடிகாமம், வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் கால் நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன.

இதில் 1063 மாடுகளுக்கு தொண்டையடைப்பான் நோய்க்கு எதிராக தடுப்பூசியும் 18294 கோழிகளுக்கு கொள்ளை மற்றும் அம்மை நோய்க்கு எதிரான தடுப்பூசியும் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தும்புத் தொழில் அபிவிருத்தி அடைவதற்குரிய சகல வளங்களும் தமிழீழத்தில் உண்டு

என்கிறார்

திருச்செல்வம் சுவக்கின்பிள்ளை



## கேட்டோம் சொன்னார்கள்

சந்திப்பு
சேரன்
மன்னார்

*சகல வளங்களும் நிறைந்துள்ள எமது தமிழீழ மண்ணிலே வேலை இல்லாத்திண்டாட்டம் அந்நியன் கையேந்தி நிற்றல், வறுமை, பசிபட்டினி இவை எல்லாம் எமக்குத்தேவை தானா ......?*

*இத்துயரம் நிறைந்த வாழ்வில் தொடர்ந்தும் வேதனையுடன் வாழத்தான் வேண்டுமா...?*

நான் பதினாறு வயதில் விவசாயத் தொழிலுக்கு வந்தவன் என் மனதில் தொழிலில் முன்னேற வேண்டும் என்ற ஒரு லட்சிய வெறி தான் குடிகொண்டிருந்தது. நான் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து முன்னேற வேண்டிய நிலைமை.

அதற்காக துவண்டு விடவில்லை துணிவுடனும் நம்பிக்கையுடனும் பாடுபட்டேன் பலனும் கிட்டியது. அதன் காரணமாக இன்று ஓரளவு வசதி வாய்ப்பு வந்தாலும்- தொடர்ந்தும் நான் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன்.

பெருந்தொகையான பனை தென்னைகள் செழிப்போடு வளர்ந்து கம்பீரமாக எழுந்து நின்று காட்சியளிக்கும். முழங்காவில் வட்டத்தில் அமைந்துள்ள குமுழமுனை எனும் கிராமத்தில்:-

திரு. திருச்செல்வம் சுவக்கின்பிள்ளை என்பவரை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு தன் கருத்துகளைக் கூறினார்.

தொடர்ந்து அவருடன் உரையாடிய பொழுது:- தங்களது வீட்டுத்தோட்டத்தில் விதவிதமான மரக்கறிவகைகள் கீரை இனங்கள், பழ மரங்கள் வாழை மரங்கள் பச்சப்பசேலென பார்ப்பதற்கு கண்ணுக்கு ஆறுதலையும் மனதிற்கு குளிர்ச்சியையும் தருகின்றது. இந்த

**கத்தாளை இலையிலிருந்து கயிறு**

*கத்தாளை இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கயிற்றையும் இது தயாரிக்கப்படும் முறை பற்றியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் நல்லூர் கண்காட்சியில் காட்சிப் படுத்தினர்.*

*கயிறு தட்டுப்பாடான இக்காலத்தில் பல்வேறு பொருட்களிலிருந்தும் கயிற்றை தயாரிக்கும் பரீட்சாத்தமுயற்சியின் ஒரு நடவடிக்கையாகவே இத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது.*

*கத்தாளை பல்வேறு தரைகளிலும் வளரக் கூடியதாவரமாகும். வரட்சியான இடங்களிலும் இது பெரியளவில் காணப்படுகின்றது. இக் கற்றாளை இலையிலிருந்து கயிறுசெய்வதை ஆர்வமுடையவர்கள் ஒரு சிறு தொழிலாகக் கூட செய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*வீட்டுத்தோட்டத்தால் ஏற்படும் நன்மைகள் என்ன......? சொல்ல முடியுமா.?*

வீட்டுத்தோட்டச் செய்கையின் மூலம் எனக்கு நாளாந்தம் வருமானம் கிடைக்கின்றது. அத்தோடு புதிய சத்து நிறைந்த கீரைவகைகளையும் மரக்கறிகளையும் சாப்பிட முடிகின்றது. வீட்டுச்செலவும் குறைகிறது.

*தங்களது வீட்டு முற்றத்தில் தென்னம் பொச்சி மட்டைகள் கும்பல் கும்பலாக வைத்துஉள்ளீர்களே இது எதற்காக என்று சொல்ல முடியுமா?*

இந்தப் பொச்சி மட்டைகளைக் கொண்டு தும்புத்தொழில் மேற்கொள்ள இருக்கிறேன்.

*பொச்சி மட்டைகளை ஊறப்போட வசதி வாய்ப்புகள் இங்கு உண்டா...? இல்லை என்றால் எப்படி செய்யப்போகிறீர்கள்...?*

தற்போதைய சூழ்நிலையில் தென்னம் பொச்சி மட்டைகளை கிணற்றைச் சுற்றிய ஈரமான நிலப்பகுதியில் சேற்றில் புதைத்து வைத்தும் நீர் இறைத்து ஒரு பகுதியை சேறாக்கி இதில் பொச்சி மட்டைகளைத்தாட்டு தண்ணீரால் நனைத்து ஈரலிப்பை பாதுகாத்து பயன்படுத்தலாம். இம்முறைகளால் சிறிய அளவில் மட்டுமே மட்டைகளில் இருந்து தும்பைப் பெறமுடியும்.

*பெரிய அளவில் செய்வதாக இருந்தால் எப்படி செய்வீர்கள்...?*

ஈரலிப்புக் காயாத தேங்காய் மட்டைகளை கடற்கரைகளில் குழி தோண்டிப் புதைத்து 6 மாதகாலம் இம்மட்டைகள் கடல்

## ஆதாரம்

நீரில் நன்கு ஊறிய நிலையில் இருக்கும். அந்த மட்டைகளை வெளியே எடுத்து பிரித்து தட்டுப் பொல்லினால் அடித்து தோலை உரித்துவிட்டு பலமுறை அடிக்கும பொழுது சோற்றி உதிர்ந்து மட்டை தும்பாகிவிடும்.

*தும்பு உற்பத்தி தொழில் செய்யவேண்டும் என்ற எண்ணம் எப்படி உங்களுக்கு எழுந்தது?*

தும்புத்தொழில் செய்வதற்குரிய சகல வளங்களும் வாய்ப்புகளும் எங்களது பகுதியில் உண்டு

இதை உணர்ந்து நான் குடிசை கைத்தொழிலாக செய்யலாம் பலருக்கு வேலை வாய்ப்பை அளிக்கலாம் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

*தும்புத் தொழில் செய்யப்போவதாக சொல்கிறீர்கள் இதற்குரிய ஆற்றல் அனுபவம் ஏதும் உண்டா?*

எனது மனைவியின் வேண்டுதலுக்கு இணங்கவே இத்தொழிலை மேற்கொள்ள துணிந்தேன். யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் தும்புத்தொழில் நிலையத்தில் இரண்டுவருட காலம் பயிற்சி பெற்றவர்.

*தும்பைக்கொண்டு எந்தவிதமான பொருட்களை உங்கள் மனைவியால் செய்யமுடியும் என்று சொல்ல முடியுமா?*

கயிறு, விளக்குமாறு, தும்புத்தடி, சாக்கு, தூரிகை வகைகள், நிலவிரிப்புகள் மெத்தைகள் போன்றவைகள் செய்யத்தெரியும்.

*அதிக அளவில் தேங்காய் மட்டைகள் எரிக்கப்பட்டும வீணே சிதைக்கப்பட்டும் வருவ*

---

மணல் பிரதேசத்தில் நாட்டப்பட்ட மரக்கறிப் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளது

*மணல்காட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு நிறுவனத்தால் பரீட்சாத்தமாக மேற் கொள்ளப்பட்ட மரக்கறி பயிர்ச் செய்கைவெற்றி அளித்துள்ளது.*

*அப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட மரக் கறிப் பயிர்களான வெண்டி, கத்தரி கீரை, பாகல், டுபாய் பூசனி, புசிற்றாவோ ஆகிய பயிர்கள் பயிர் செய்யப்பட்டன.*

*இதுவரை எவ்வித பயிர்களும் உண்டு பண்ணப்படாத நிலத்தில் இப் பயிர்ச்செய்கைவெற்றி அளித்துள்ளதுடன் நீரந்தரப் பயிர்களாக எலுமிச்சை, வாவுலு, கொடித்தோடை, ஆகிய மரங்களும் பரீட்சாத்தமாக நடுகை செய்யப்பட்டு வெற்றியளித்துள்ளன.*

# ஆதாரம்

கயிறு உற்பத்தி நிலையம் ஆரம்பிப்பு

தும்புத் தொழிலை மேம் படுத்தும் நோக்குடன் விசுவமடு வட்டத்திலுள்ள வள்ளுவர் புரம் கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தினால் கயிறு உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டது.

தும்பு உற்பத்தியில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் உற்பத்தி நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு நூறு கிலோ கயிறு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இவ் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதனூடாக இருபது பேர் வரை வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாக இங்கு என்னிடம் பலர் சொன்னார்கள் இதில் உண்மை உண்டா?

உண்மைதான் மட்டைகளைமட்டுமல்ல சிரட்டைகளையும் குசினித்தேவைக்கு பயன்படுத்துகின்றனர்.

ஒரு தும்புத்தடி கயிற்றுடன் சேர்த்து கட்டுவதற்கு 4 முழுத்தேங்காய் மட்டைதேவை

ஏறத்தாழ 10 பொச்சிமட்டைகளில் இருந்து சுமார் 1 கி. கிராம் தும்பு பெறமுடியும்

1 1/2 கி. கிராம் தென்னம் தும்பில் இருந்து 1 கிலோ கயிறு தயாரிக்கப்படும்.

தும்புத்தொழில் ஆரம்பிக்க இருக்கின்றீர்கள் ஒரு சில நேரங்களில் தும்புத்தொழில் பொருட்கள் கொழும்பில இருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டால் என்ன செய்வீர்கள்...?

எமது மண்ணிலே 1984ல் கொழும்புத்துறையில் கையால் தும்பு அடித்து சிறிய அளவில் நடைபெற்ற இத்தொழில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அதிகப்பிரசங்கப்படாத முறையிலும் இயந்திரமயமாக்கப்பட்டது. இத்தொழில் மூலம் இன்று பலர்வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் பெற்று வருகின்றனர் எக்காரணம் கொண்டும் இறக்குமதி செய்யமாட்டார்கள்.

ஒரு நாளைக்கு ஒருவர் எத்தனை தும்புத்தடிகள் உருவாக்க முடியும்...?

ஆக குறைந்தது 10 தும்புத்தடிகள் உருவாக்க முடியும்.

# ஆதாரம்

*குடும்பத் தொழிலாக செய்து மாதம் எவ்வளவு வருமானத்தை பெறமுடியும்...?*

மாதம் 6000 ரூபாவை வருமானமாக
மாதா மாதம பெறமுடியும்

*தும்புத்தொழில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால நாம் என்ன செய்யவேண்டும் ?*

தும்புத்தொழில் அபிவிருத்தி அடைவதற்குரிய
சகல வளங்களும் தமிழீழத்தில் உண்டு.
பாரிய கைத்தொழிலாக இல்லாமல்
குடிசைக்கைத்தொழிலாக செய்தே எமது
சுயதேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.
பலருக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கலாம்
ஒரு தொழிலாளர் தினமும் 200 ரூபா
வரையில் தேறிய வருமானத்தைப் பெறலாம்

இன்று தும்புப் பொருட்தேவையை பூர்த்தி
செய்ய பல தொழிலாளர்கள் உழைத்து
வருகிறார்கள் உற்பத்தி செய்யப்பட்ட கயிறு,
விளக்குமாறு, தும்புத்தடி போன்றசில
தெங்கு உற்பத்திப பொருட்களுக்கு நல்ல
சந்தை வாய்ப்பு உண்டு எமது உற்பத்திப்
பொருட்களைப் பாதுகாப்பதும்
வளர்ப்பதும் அவற்றினைப் பாவிப்பதும்
எம் ஒவ்வொருவரினதும கடமையாகும்.
இதன் மூலமே தமிழீழம் தனது கால்களில்
நிமிர்ந்து நிற்கும் தகுதியைப்
பெற்றுக்கொள்ளும்

*தும்புசார் பொருட்கள் மூலம் அந்நியச் செலாவணி வருவாயை ஈட்டலாம் என கருதுகிறீர்களா...?*

தும்புசார் பொருட்கள் மூலம் நல்ல
சந்தை வாய்ப்பைபெறுவதோடு போதிய
வருவாயையும் ஈட்டித்தருவதாக உள்ளது.
இதுவரை சிங்கள நாட்டிற்கு சென்று
கொண்டிருந்த பணம் மீதப்படுகின்றது.
எல்லாவற்றுக்கும் செலாவணி வருவாயை

---

**உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டிடம் அமைப்பு**

*முற்றிலும் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, மாதிரிக் கட்டிட அமைப்பொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானபகுதியினர் நல்லூர் காட்சியகத்தில் அமைத்திருந்தனர்*

*மிகவும் அழகுற அமைக்கப்பட்ட அக் கட்டிடம் உள்ளூர் சுண்ணாம்பினாலும், செங்கற்களாலும கட்டப்பட்டதுடன் ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஓட்டினால் வேயப்பட்டுள்ளதுடன் அவற்றின் கதவுகள் யன்னல்கள் என்பன மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வன்னிப்பகுதியில் உற்பத்தியாகும் பிரம்பினால் ஆக்கப்பட்டிருந்தன.*

*உள்ளூர் கட்டுமானப் பொருட்களை பயன்படுத்தி கட்டப்பட்ட இக் கட்டிட அமைப்பை பெருமளவு மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.*

ஈட்டித்தருவதாக உள்ளது.
இதுவரை சிங்கள நாட்டிற்கு சென்று கொண்டிருந்த பணம் மீதப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக மலரப்போகும் தமிழீழத்தில் அந்நியச் செலாவணி வருவாயை ஈட்டித்தரும் தொழிற்துறையாக இது அமையப் போகின்றது.

*தொழில் ஆரம்பிக்க பணம் தேவைப்படுமே அதற்கு என்ன செய்யப் போகின்றீர்கள்...?*

த. பொ. மே நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டு வரும் சுய தொழில் கடன் திட்டத்தின் மூலம் இதுவரையில் 1593 குடும்பங்கள் பயன் அடைந்து உள்ளனர். அதே போல் நானும் கடன் பெறுவதற்கு விண்ணப்பம் செய்துள்ளேன.

*தும்புத்தொழில் பற்றி இறுதியாக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன ..?*

பொருளாதாரத்தடை மூலம் உணவு உற்பத்திக்கு சிறிலங்கா அரசு விடுத்த தடையை சவாலாக ஏற்று வெற்றி கொண்டதை புள்ளி விபரம் காட்டுவது போல் இத்தொழிலையும் சவாலாக ஏற்று எமது தேசிய வளத்தை எமது மனித சக்தியின் மூலம் எமது மக்களின் நுகர்ச்சிக்கு வழங்க வேண்டும்,

காலத்திற்கு ஏற்ப எமது வேலை வாய்ப்பினையும் தெரிவு செய்தாலேயே வாழ்க்கையை கொண்டு நடத்த முடியும்.

உழைப்பும் விடாமுயற்சியும் மன உறுதியும் எமது வளங்களைப் பயன்படுத்தவும் அனுபவிக்கவும் நாம் தயங்கக் கூடாது நம்பிக்கையும் வைத்துள்ளேன் வெற்றியும் கண்டு வருகிறேன்.

□□

**கிட்டு 92 பப்பாசிப்பழத் திலிருந்து பப்பாசிப்பழச் சட்னி**

*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியின் கிட்டு 92 பப்பாசிப்பழத்திலிருந்துபரீட்சார்த்தமாகப் பப்பாசிப்பழச் சட்னி தயாரித்துள்ளனர் மிகவும்சுவை நிறைந்தஇந்த சட்னி சோறு, இடியப்பம், பிட்டு ஆகிய உணவுகளுடன் சேர்த்துக் கொள்வதற்கு சிறந்ததாகும்.*

*இத்தயாரிப்பு வெற்றியளித்ததன் மூலம நாடெங்கிலும் கிட்டு 92 பப்பாசிப்பழச் செய்கை ஊக்குவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது*







"சாதாரணமாக கிணற்று நீரை நம்பி தோட்டம் செய்யலாம் பயிர்கள் செழிப்பாக வளரும் எரிபொருளைக் குறைத்துக் கொள்ளலாம்."

ஜெயபுரம்
கி. கருணாகரன்
அவர்களின்
விவசாயச் செயற்பாடுகளை
பார்வையிட்டுச்
சொல்பவர்
சேரன்

அண்மையில் ஜெயபுரம் குடியேற்றத்திட்டத்திற்குச் சென்ற நான் விவசாயம் செய்யப்பட்டிருந்த பலரது காணிகளை நேரில் சென்று பார்வையிட்டேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் ஒரு இளைஞரின் பெயரையும் அவர் விவசாயம் செய்துள்ள காணியையும் சென்று பார்வையிடும்படி பலர் என்னைப்பணித்தனர்.

அவரைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் அவர் இல்லம் சென்றேன். என்னைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றார். தங்களது விவசாயக் காணியை பார்வையிட வந்துள்ளேன் என்றதும் எந்த விதமான தயக்கமும் இல்லாமல் 1 1/2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட அந்தக் காணிக்குள் என்னை அழைத்துச் சென்றார்.

எங்கு பார்த்தாலும் பச்சை பசேல் என்ற பசுமையுடன் பலவிதமான பயிர்கள் தலை நிமிர்ந்து செழிப்போடும் வனப்போடும் பூத்துக் குலுங்கி பாத்தி பாத்தியாக அகரவரிசையில் அமைந்து இருப்பதைக் கண்டேன்.

நான் தங்களது காணியை பார்வையிட வரும் வழியில் புதிய முறையில் விவசாயம் செய்து வருவதாக அறிந்தேன். அது எவ்வகை ஆனது என்பதை சொல்லுங்கள் கேட்போம் ஏனைய விவசாயிகளுக்கும் வழிகாட்டியாக அமையும் அல்லவா...?

9-ம் மாதம் ஆரம்பத்தில் அநேகமாக வறட்சியான காலம் என்றே

## ஆதாரம்

சொல்லவேண்டும் அந்தக்காலத்தில் கிணற்றில் நீர் இல்லாமல் போகும். கூடினால் 15—20 வாளி தண்ணீர் தான் இருக்கும். பொலித்தீன் இல்லாத காரணத்தால் மாற்றுவழியாக தேநீர் கடைகளுக்குச் சென்று வெற்று லக்ஸ்பிறே பைகளை ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் கொடுத்து வாங்கி அவற்றை எல்லாம் ஒன்றுசேர்த்து 500 அல்லது 1000 சேர்ந்தவுடன் தற்போதைய சூழ்நிலையில் யூரியா பெற முடியாத காரணத்தால் வீதிகளில் உள்ள பாலங்களிலும் பாழடைந்த விடுதிகளில் இருந்தும் வௌவால் எச்சங் (புழுக்கை) களை சேகரித்து வைப்பது என் வழக்கம்.

**வௌவால் எச்சம் இதைக்கொண்டு என்ன செய்வீர்கள்...?**

வௌவால் எச்சம் சாதாரணமாக சேகரிக்கும் கூட்டெரு மாட்டெரு பி. மிச்சர் இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து மரநிழலில் குவித்து அதன் மேல் எருக்கலம் குழை, வேப்பங்குழை, பன்னக்குழை, இந்த மூன்றாலும் மூடி அதற்கு மேல் பூவாளியால் சிறிதளவு நீர் கிழமை தோறும் ஊற்றிவரவேண்டும் 9-ம் மாதம் மேற்குறிப்பிட்ட கலவையில் ஒரு பகுதியும் நெருப்பு கொளுத்திய வெந்த மண்ணில் இரு பகுதியாக சேர்ந்த லக்ஸ்பிறே பைகளின் அடிப்பகுதியை கூரிய ஆயுதத்தினால் ஓட்டைகள் இட்ட பின் இந்தக் கலவைகளை அதில் இட்டு நிழல் தரும் இடத்தில் வைத்து பயத்தம், வெண்டி, பாகல், போஞ்சி, புடோல், வித்துக்களை அதிலிட்டு தண்ணீர் ஊற்றி வரவேண்டும்.

**ஆரம்ப நிலையில் தண்ணீர் அவசியமா...?**

ஜெயபுரத்தில் 8-ம் 9-ம் மாதங்களில் மழை பெய்யாது. கிணற்றில் கூடுதலாக நீர் இருக்காது அதனால் 20 வாளி தண்ணீரினால் 500 தாவரங்களை 20 நாட்களுக்கு வளர்க்க முடியும்.

**மழை பெய்யாது போனால் என்ன செய்வீர்கள்...?**

மழை பெய்தாலும் பெய்யாது விட்டாலும் ஆரம்பத்தில் லக்ஸ்பிறே பையின் அடிப்பாகத்தை முற்றாக வெட்டி எடுத்து இவற்றை சரியான அளவின்படி தாவர நிலையங்களை அமைத்து அதற்கு முன்பு கலந்த கூட்டெருவை இட்டு லக்ஸ்பிறே பையை அப்படியே நிலத்தில் தாட்டு மீண்டும் 20 நாட்களுக்கு சிறிதளவு தண்ணீருடன் பராமரிக்க முடியும். தாவரத்திற்கு பன்னக்குழை அல்லது வேப்பங்குழையினால் நிழலிடுவது மிகவும் முக்கியம்.

**லக்ஸ்பிறே பைகளில் இப்பயிர்கள் எப்படி வளரும் என்பதை விளக்கமாக சொல்ல முடியுமா...?**

ஆரம்ப மழைக்கு இப்பயிர்கள் ஒரு மாதம் தொடக்கம் 1 1/2 மாத வயதுடையதாக இருக்கும் மழைக்காலத்தில் நீர்பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை

**கத்தரி, தக்காளி, மிளகாய் இவற்றுக்கும் கூட்டெரு ஆவசியமா? இவைகளை எப்படி பைகளில் இடவேண்டும்...?**

கூட்டெரு முக்கியமாக இடவேண்டும். அரை அடி ஆழத்திற்கு மண்ணை வெட்டி எடுத்து அதில் லக்ஸ்பிறே பைகளை பரவி அதற்குமேல் கூட்டெரு - வெந்தமண் கலந்து வைத்துவிட்டு விதைகளை சிறு சிறு தொகையாக பருத்தித் துணியில் கட்டி இரண்டு நாட்கள் நீரில்நனைய வைத்து எடுத்து வேம்பு, பன்னை இலைகளை நிழலான இடங்களில் பரவி அதற்கு மேல் இந்த விதைப் பொட்டலங்களை நீர்வடிய விடவேண்டும் மறுநாள் ஈரழிப்பான மண்ணில் இவற்றைத்தாட்டு அவித்து ஒரு நாள் முழுதும் ஆறிய வேப்பங்குழைத் தண்ணீரை இதன் மேல் தெளிக்கவேண்டும் பின்பு 6-7-8 ம் நாட்களின் முன்பு தயாரித்த பாத்திகளில் சாதாரண நாற்று மேடை போல் அமைத்து இருபது நாள் தொடக்கம் முப்பது நாட்களில் மீண்டும் லக்ஸ்பிறே பைகளில் இரண்டு அல்லது மூன்று நாற்றுகளை நட்டு பின்பு ஒரு மாதம் அல்லது 1 1/2 மாதங்களில் நிலையங்களில் நடலாம் ஆரம்ப மழைக்கு ஒன்று தொடக்கம் இரண்டு மாத பயிராக வளர்க்கலாம்.

இந்தச் செய்கையின் மூலம் கிடைக்கும் நன்மைகள் என்ன?

சாதாரணமாக கிணற்று நீரை நம்பி தோட்டம் செய்யலாம் பயிர்கள் செழிப்பாக வளரும் எரிபொருளைக் குறைத்துக்கொள்ளலாம். கூலியாட்கள் இல்லாமலும் செய்யலாம். இந்தச் செய்கையால் மானாவாரி விவசாயச் செய்கையில் அறுவடை செய்யும் காலத்தைவிட ஒரு மாதம் தொடக்கம் இரண்டு மாதத்துக்கு முன்பு செய்தால் சந்தை விலை இரட்டிப்பாக இருக்கும். நான் கையாண்ட முறையால் பெருமழை பெய்தும் எதிர்பாராத விளைச்சல் எனக்கு எட்டி உள்ளது.

□□

## கட்டாக் காலிகளை உழவுக்கு பயன்படுத்துதல்

முல்லை மாவட்டம் முத்தையன் கட்டுப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளை உழவுக்குப் பயன்படுத்தப்படும் செயற்பாட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கட்டாக்காலிகளாக பயிர்களை நாசம் செய்யும் எருமை மாடுகளைப் பிடித்து பண்ணையில் வைத்து உழவு பழக்கி விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதன் கீழ் முத்தையன் கட்டுப் பண்ணையில் தற்போது 50 எருமைகளுக்கு இவ்வாறு உழவு பழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நந்தாவில் குளம்

யோ. சுதர்சினி

எமது தமிழீழத்தில் உள்ள வளங்கள் எல்லாமே பாதுகாக்கப்பட வேண்டியவை. தற்போது எமது பிரதேசம் சிறீலங்கா அரசின் அடக்கு முறையில் இருந்து விடுபட்டு தற்சார்பு பொருண்மிய தமிழீழமாக வேகமாகவே உருவாகிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலையில்த்தான் சீரழிந்துபோன நீர்நிலைகளைப் பராமரிக்கும், புனரமைக்கும் வேலைகள் தீவிரமடைந்து வருகின்றன. இதற்கு இணங்கவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நீர்வளமேம்பாட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

எமது தமிழீழத்தில் யாழ்குடா நாட்டின் நீர்வளம் என்பது பெரும்பாலும் நிலக்கீழ் நீராகவே காணப்படுகின்றது. இங்கு வன்னிப்பெருநிலப்பரப்பு போன்று பாரிய நீர்ப்பாசன குளங்களைக் கொண்டிருப்பதில்லை. எனினும் சிறிய சிறிய குளங்கள் யாழ்குடா நாட்டில் அமைந்திருந்த போதும் அவை தேவையற்ற நீர்நிலைகளாக கைவிடப்பட்டு வருகின்றன. இவை புனரமைப்பு செய்யப்படவேண்டும.

எமது பிரதேசத்தில் நாம் குளங்கள் புனரமைப்பில் கவனம் செலுத்துதல் என்பது முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு புனரமைக்க வேண்டிய குளங்களில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் அமைந்துள்ள நந்தாவில் குளமும் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்குளத்தையும் அதன் பலாபலன்களையும் நோக்கும் போது அவை குறைவாக இருக்கலாம். ஆனால் இக்குளம் புனரமைக்கப்படின் பெறப்படும் பலன் அதிகமானவையே.

நந்தாவில் குளம் என்பது மிகச்சிறிய குளமாகவே இருக்கின்றது. இதனால் நீரின் கொள்ளளவு என்பதும் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் பெரும்மழை பெய்கின்ற காலங்களில் குளம் நிரம்பி வழிந்து, மேலதிகநீர் கடலைச் சென்றடைவதோடு, அப்பிரதேசத்தில்உள்ள

---

எமது பிரதேசத்தில் யாழ்குடா நாட்டின் சிறுசிறு குளங்கள் அணைக்கட்டுக்கள் கூட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துரிதநீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவது அனைவர்க்கும் தெரிந்ததே. கோப்பாய், நீர்வேலி அணைக்கட்டுவேலை யாவில்குளம், ஆராத்திகுளம், சீராவிக்குளம் எல்லாமே யாழ் தேச நிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

---

# ஆதாரம்

குடிமக்கள் இடம்பெயர்ந்து, செல்லவேண்டிய இக்கட்டான சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

கடந்த வருடம் மார்கழி மாதம் பெய்த பெரும் மழையின் காரணமாக நந்தாவில் குளம் நிரம்பியதால் சுமார் நூறு குடும்பங்கள் இடம்பெயர்ந்து பல கஷ்டங்களுக்கு உள்ளாகினர். இவ்வாறான அபாயநிலை ஏற்பட்ட போதும் இக்குளத்தைப் புனரமைப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. உண்மையில் இக்குளம் புனரமைக்கப்படின் அப்பிரதேச மக்களே நன்மை பெறுவர். எனவே இதில் அப்பிரதேச மக்களின் செயற்பாடு என்பது முக்கியமானதே.

நந்தாவில் குளத்தைத் திணைக்களங்கள் தாமே பொறுப்பேற்று புனரமைக்க வேண்டும் என்பதல்ல, இக்குளத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அப்பிரதேச மக்களின் கைகளிலேயே இருக்கின்றது ஏனெனில் பெரும்மழைக் காலங்களில் இன்னல்களுக்கு உட்படுகின்றவர்களும் அப்பிரதேச மக்களே. எனவே அவ்வப் பிரதேசமக்களே திருத்தவேலைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பின் அவர்களே திணைக்களங்களோடு தொடர்புகொண்டு வேலைகளை மேற்கொள்வதற்கான உந்துசக்தியாக இருக்க வேண்டும்.

இக்குள புனரமைப்பின் போது சிறிய வேலைகளையே மேற்கொள்ளவேண்டியுள்ளது. அந்த வகையிலே குளத்தினைச் சுற்றியுள்ள புல்லுகள் அகற்றப்பட வேண்டும் மற்றும் அணைகள் பலப்படுத்தப்படல் வேண்டும். எனினும் இக்குளத்தின் அணைக்கட்டு அரிக்கப்படும் நிலையில்தான் காணப்படுகின்றது. எனவே இம்மக்கள் குளத்தினைச் சுற்றியுள்ள மண்ணையாவது வெட்டியெடுப்பதைத் தவிர்த்து இக்குள அணையைப் பலமாக வைத்திருப்பதற்கு உதவ வேண்டும்.

நந்தாவில் குளமானது ஏனைய குளங்கள் போன்று இல்லாமல் வித்தியாசமான அமைப்பாக இருப்பதாலும் அப்பகுதி மக்கள் வெள்ள அபாயத்துக்கு உட்படுகின்றனர். இப் பிரதேசத்தில் மழைகாலங்களில் பல பகுதிகளிலும் இருந்து பாய்ந்து வந்து குளத்தைச் சேர்கின்ற நீரானது மீண்டும் ஒரேயொரு வெள்ள வடிகாலின் ஊடாகவே கடலைப் போய்ச் சேரவேண்டியுள்ளதால் இவ்வெள்ள வடிகால் ஒழுங்காகப் பராமரிக்கப்படாமையால் மழைநீர் தேங்கி நின்று மக்கள் அபாயத்துக்கு உள்ளாகின்றனர். ஆனால் இவ் வெள்ளவடிகாலும் ஒழுங்காகப் பராமரிக்கப்படுமாயின் மேலதிகமான நீர் கடலைச் சென்றடைய மக்கள் வெள்ள அபாயத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எமது பிரதேசத்தில் யாழ்குடா நாட்டின் சிறுசிறு குளங்கள் அணைக்கட்டுக்கள் கூட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துரிதநீர்வளமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவது அனைவர்க்கும் தெரிந்ததே. கோப்பாய் நீர்வேலி அணைக்கட்டுவேலை யாவில்குளம், ஆராத்தி குளம் சிராவிக்குளம் எல்லாமே யாழ் தேச நீர்மாணிகளால் புனரமைக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறு யாழ்குடா நாட்டில் உள்ள நீர்தரும் குளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் இம் மக்களால் பராமரிக்கப்படவேண்டிய நீர்நிலைகளில் நந்தாவில் குளத்தை சிரமதான அடிப்படையிலோ வேறு எவ்வகையிலோ புனரமைக்க வேண்டும்.

எனவே நந்தாவில் குளம் வண்டல் அகற்றப்பட்டு ஆழமாக்கப்பட்டு சுற்றுப்புற சூழல் என்பன புனரமைக்கப்பட்டால் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்வதோடு சிறந்த பலாபலன்களையும் அநுபவிக்கமுடியும். எனவே மக்கள் ஒருமித்துச் செயற்பட வேண்டும். ☐

# முல்லை மாவட்டத்தில் விலங்கு வேளாண்மைத்துறை அபிவிருத்தி

ச. ந. சந்திரசேகரன்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் போர்த்திறனிலும் சரி கலைபண்பாட்டுத்துறையிலும் சரி சமூக பொருண்மியத்துறையிலும் சரி தன்னகத்தே பெரும் வரலாற்றுப் பெருமை கொண்ட பிரதேசமாகவும் கடின உழைப்பாளிகளை கொண்ட பிரதேசமாகவும் விளங்கும் முல்லை மாவட்டம் விவசாயம், விலங்கு வேளாண்மை ஆகிய இரு துறைகளையும் தனது இரு கண்கள்போல் கொண்டுள்ளது. இங்குள்ள மக்களின் வருவாயைப் பெருக்கும் துறையாகக் காணப்படுகின்ற இவ்விரு துறைகளையும் அம்மாவட்ட மக்கள் தமது கடின உழைப்பால் மேம்படுத்தி வந்தனர். ஆனால் சிறிலங்கா அரசின் இனவாத அரசியல் போக்கின் காரணமாகவும் இந்திய வல்லாதிக்க போர் நடவடிக்கை காரணமாகவும் இப்பகுதி மக்களின் பொருளாதாரம் சிதைவடைந்தன.

இந்த வகையில் விலங்கு வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவில் மிகவும் மேம்பாடான நிலையில் காணப்பட்ட தமிழீழத்தின் இதயப்பகுதியாக விளங்கும் மணலாற்றைக் கைப்பற்றுவதற்காக இந்திய, சிங்களப் படைகள் நடத்திய தொடர்ச்சியான ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளால் அப்பகுதி சிதைவடைந்தது இதனால் இங்கு காணப்பட்ட விலங்கு வேளாண்மைத்துறையில் முக்கியம் பெறும் நல்லின காளை இனங்களான கிளாரி (காங்கேயன்) இன இழுவை மாடுகளும், நல்லின பசுக்கள், சூர்த்தி இன

*கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் பண்ணையாளர்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன மேலும் சேவை நிலையங்களை மாவட்டமடங்கிலும் அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.*

எருமை மாடுகள் ஆகியன கவனிப்பார் அற்று சிதறி ஓடின. மிதிவெடிகளில் அகப்பட்டு ஊனமுற்றன அத்துடன் கால்நடை உரிமையாளர்களும் பண்ணையாளர்களும்

# ஆதாரம்


இடம்பெயர்ந்ததுடன் தம்முடன் இழுத்துச் சென்ற எஞ்சிய கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல் மருத்துவ ஆலோசனை பெறல் என்பவற்றில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினர் மேலும் போக்குவரத்துச் சீரின்மையால் ஏற்பட்ட பால் மற்றும் விலங்கு வேளாண்மைத்துறை உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் பிரச்சனை போன்ற நிலைகளினாலும் வேறு பலகாரணிகளாலும் மாவட்டத்தில் விலங்கு வேளாண்மைத் துறை மிகவும் பாதிப்படைந்தது இந்நிலையில் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இவ்வாறான பொருண்மியசமூகப்பின்னடைவுகளை நிவர்த்திசெய்யும்முகமாக மாவட்டத்தின் இத்துறையை புனரமைத்து எழுச்சியூட்டும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டன இதனடிப்படையில் நல்லின கால் நடைகளை விருந்தி செய்வதற்கான செயற் பாடுகள் விரிவாக்கப்பட்டதுடன் இருக்கின்ற கால்நடைகளை சிறந்த முறையில் பராமரிக் கவென மணலாற்றுக் கோட்டத்திலும் முள் ளியவளையிலும் கால்நடை சுகாதாரசேவை நிலையங்கள் அமைத்து அங்கு அத்துறை சார் பயிற்சியாளர்களைநியமித்து அங்குள்ள பண்ணையாளர்களுக்கு இலவச ஆலோசனை வழங்கி கால்நடை வளர்ப்பை ஊக்குவித்து வருவதோடல்லாமல் தடுப்பூசி போடல் சிறு சிகிச்சை வழங்கல் என்பனவும் மேற்கொள் ளப்படுகிறது. அத்துடன் கால்நடை சுகா தார திணைக்களங்களூடாக கால்நடைக ளுக்கு தேவையான மருந்துகள் பண்ணை யாளர்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளன மேலும் சேவை நிலையங்களை மாவட்டமடங்கிலும் அமைப் பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

அத்துடன் பண்ணையாளர்களிடையே மிக நீண்டகாலமாக காணப்பட்ட சந்தைப் படுத்தல் பிரச்சனையை நிவர்த்திசெய்யும் முகமாக குமுழமுனையில் நெய் உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டு அங்கு பால் கொள் வனவு இடம்பெற்று வருவதுடன் நெய்நீச்கிய பால் சுவையூட்டப்பட்டு பிறஇடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும்பால் பால் குறைவான இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இத்திட்ட விரிவாக்க முயற்சி யாக மேச்சற்தரை திட்டங்கள் நல்லினபுல் வளர்ப்புகள் என்பன செயற்படுத்தப்படுகின் றன இதற்கென முல்லைமாவட்டம் பேராற் றுக்கரையில் மேற்கொள்ளப்பட்ட பரீட் சார்த்த புல்வளர்ப்பு திட்டம் பெருவெற்றி அடைந்ததைத் தொடர்ந்து நல்லின புல் வகைகளான 'நேப்பியர்' கினீடி என்பன பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவற்றைப் பெருக்குவதுடன் குளக்கரைகள், நீரேந்து பிரதேசங்கள் வாய்க்கால் கரைகள் ஆகிய பொது இடங்களிலும் இப்புல் வளர்ப்பு சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஒருங்கி ணைந்த பண்ணைத்திட்டத்தினூடாகபன்றி, முயல், மாடப்புறா சிறியஇன கோழி, ஆடு, குதிரை, வான்கோழி ஆகிய அருகி வரும் இனங்களை வளர்த்து இன விருத்தி செய்வதோடு பொதுமக்களையும் இக்கால்நடைவளர்ப்பில் ஊக்குவிப்பதற்காக கோழிக்குஞ்சு விநியோகங்கள் என்பன மேற் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறாக நல்லின கால்நடைகளை அழிவிலிருந்து கட்டுப்படுத்துமுகமாக மேற் கொள்ளப்பட்டுவரும் இறைச்சிப்பரிசோத னை முறைகள்திட்டமிட்டவிலங்கு வேளாண் மைத்துறை மேம்பாட்டிற்கான கால்நடைக ளுக்கு இலக்கமிடல் திட்டங்கள் நோய்தடுப் பிற்கான விரைவான நடவடிக்கைகள் மேச் சற் தரைத்திட்ட விரிவாக்கம் என்பவற்று டன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைத்தல் மூலமான சேவை கள் மூலம் முல்லை மாவட்டம் விலங்கு வேளாண்மைத் துறையில் பாரியதொரு வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருப் பதுடன் எமது தமிழீழ தேசத்தின் தற் சார்புப் பொருண்மிய வளர்ச்சிக்கு மாவட் டமும் இத்துறையும் பாரிய பங்கை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. □□

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 10



- இக்குறுக்கெழுத்துப் போட்டியில் சகலரும் வயதெல்லையின்றிக் கலந்து கொள்ளலாம்.

''ஆதாரம்''
முதன்மைச் செயலகம்
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தாவடி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும் தபால் உறையின் இடது பக்க மூலையில் ''குறுக்கெழுத்துப் போட்டி இல 10'' எனக் குறிப்பிடவும்

- முடிவு திகதி:- 30-4-95
- சரியான விடை எழுதும் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## மேல் இருந்து கீழ்

1) தற்போது உள்ள ஒரு கோடி பனை வளத்தை இரண்டாயிரம் நூற்றாண்டளவில் இரண்டு கோடியாக மாற்றும் திட்டம் இது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது.

2) இப்படியும் பெண்களை அழைக்கலாம்.

3) கடலில் பயணம் செய்ய இது உதவும்.

[கீழ் இருந்து மேலாக உள்ளது]

4) இதற்கு பெரிதும் எண்களே பயன்படுத்தப்படுகின்றது நடைமுறை வாழ்விற்கு இது முக்கிய மானது.

5) உயிரினங்களின் ஒரு வகை சுரப்பின் பொதுப்பெயர் வாழ்வின் கட்டுப்பாட்டு கருவியாகவும் அமையும்.

[கீழ் இருந்து மேலாக உள்ளது]

6) கண்ணுக்கு தெரியாது ஆனால் பாயும்.

[கீழ் இருந்து மேலாக உள்ளது]

7) சுறு சுறுப்பாக இயங்கும் ஒரு பூச்சி வகை இதன் சேமிப்புப் பொருள் இனிமையானது.

[கீழ் இருந்து மேலாக உள்ளது]

11) மாவீரர் நினைவாக 1993ம் ஆண்டு கெற்பலி (யாழ்மாவட்டம்) 10 ஏக்கரில் இது ஆரம்பிக்கப்பட்டது.

# ஆதாரம்

## இடம் இருந்து வலம்

1) கடற் புலிகள் சாதனை செய்யும் இடம்.

5) நல்லது செய்வோருக்கு இதுவும் கிடைக்கும்.

6) சமையலறையில் பெரும்பாலும் காணலாம் பொருள் அகப்பட்டால் போதும் அரைத்தே போடும்.

7) உறுதியான அழகிய பொருட்கள் செய்ய வல்ல மரம். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகப்படுத்திய மாவீரர் சோலை நிதிய சிறுவர் சேமிப்பில் இது ஒரு அங்கம்.

[வலம் இருந்து இடமாக உள்ளது]

8) விமானத்தினைக் கண்டுபிடிக்க ஓர் உந்து சக்தி யாக இருந்தது.

9) உயிர் ஆபத்துள்ள கதிர்கள் வான வெளியில் இருந்து வருவதை இது தடுக்கின்றது சூழல் மாசடைந்தால் இத் தடுப்பு கவசமும் அழிவடையலாம்.

10) கற்பகத்தின் கைப்பணியால் இதையும் உருவாக்கலாம்.

11) தமிழர்களின் தேசிய உணவு.

12) பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பமாகின்ற ஒழுக்கத்தைப் பேணும் அமைப்புகளில் ஒன்று.

## மக்களின் மனங்களைக் கவர்ந்த காட்சியகம்

*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நல்லூர்க்கண் காட்சியிலே "மனங்கவர்ந்த காட்சியகத் தெரிவுப் போட்டி" நடைபெற்றது. இப்போட்டியை பார்வையிட்ட மக்களின் விருப்பத்தெரிவு அடிப்படையில் கைத்தொழிற் பகுதிக் காட்சியகம் முதலாம் இடத்தைப் பெற்றது.*

## மீன் உற்பத்தியை அதிகரிக்க கரைவலை மீன்பிடித் திட்டம்

*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டத்தினால் அளம்பில் கிராமத்தில் கரைவலை மீன்பிடித்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

*இத்திட்டத்தில் 35 குடும்பம் நேரடி தொழில்வாய்ப்பை பெறுவதுடன் புரத உணவான மீனும், கருவாடும் இத்திட்டத்தால் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றது.*

# குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 8 முடிவுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 ய | | | | 2 பி | டி | ல் |
| 7 உ | ப் | பு | | | ர | | |
| | பா | | | 8 பு | ம் | ரு | 3 க |
| 4 ப | ண் | பு | 5 ல் | | பு | | ட |
| ர | | | ழி | | | 9 ய் | தா |
| ந் | | | 10 தொ | ப் | பி | | சி |
| 11 த | றி | | த் | | | 6 ஆ | |
| ன் | | | 12 கை | ப் | ப | ணி | |

பரிசுக்குரியவர்கள்:

1) இ. நதி
C/o. Dr. K. இராதாகிருஷ்ணன்
வட்டு இந்துக் கல்லூரி வீதி,
சித்தங்கேணி.

2) க. இளமதி
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு
மாவீரர் பணிமனை,
திருநெல்வேலி.


3) கவிதா சிதம்பரப்பிள்ளை
C/o வேலுப்பிள்ளை
கடற்கரை வீதி,
செம்மலை - அளம்பில்.

☐ பரிசு பெற்றவர்களுக்குரிய பரிசுகள் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

☐ முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து தமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளாக பின்வரும் நிறுவனங்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றன.

- மில்க்வைற் தொழிலகம் யாழ்ப்பாணம்.
- அண்ணா தொழிலகம் இணுவில்.
- ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (பி) லிமிட் யாழ்ப்பாணம்.

# அஃ்ணன் கனவு நனவாகிறது



வேலணையூர்
சுரேஷ்

தண்டவாளத்தையும்.........
தோண்டி மரங்கள் பதித்தாச்சு என்றால்
''கொண்டா ஈழம்'' என்பதே
அதன் குறி; உணர்க;
சாலைகளெல்லாம் இனிப்புலரும்
ஈழச் சோலையில் எழில்கூடியதாய்
நாளையமையும்; அறிக;
திருக்கல் வண்டிலோடக் கடகடக்கும்
தெருக்கள் அல்ல...........
குருக்கள் கைமணியும் குலுங்காது.
நெருக்கல் நிலைதளர்ந்த
விரிந்த சாலைகள் நாளை தோன்றும்;
புகைவண்டிகளும் மரக்
குகைக்கூடே புகுந்தோடும்.
வெய்யில் அடிக்கும்;
எனினும் தமிழனிங்கே
கையில் குடையின்றி நடப்பான்;
உச்சிக்கு மேலே........
பச்சைப் போர்வை விரித்தாற்போல்
இச்சையுடன் சுகமளிக்கும்
இனிய மரப் பந்தல்கள்;
நேற்றுவரை வெய்யில்........
குளித்தபடி பயணித்தவன் நாளை
காற்றைக் குடித்தபடி தொடர்வான்;
ஏ... ... பக்கத்து நாட்டரசே;
புரிந்திடுக;
சிக்கல் மிகுந்தவுன் சாலைகளுக்கு
முழுக்கு முடிந்துவிட்டது.
இனிப் புலரும் மண்ணில்
எல்லாம் புதியதாய் ஆகும்; அறிக;
நடை பயிலும் தெருக்கள்;
அதற்கு.......
குடை பிடிக்கும் மரங்கள்.
இடை(யை) அசைக்கும் பயிர்கள்;
அதற்(கு) .......
கிடையாய்ப் பாயும் ஆறுகள்
நீர்நிலைகள்........
நெடும் குளங்கள்.........
ஊர் செழிக்க வேண்டி
ஒருபோதும் ஓய்வின்றி
உழைக்கும் மனித வளங்கள்
யாருக்கும் அஞ்சாத் துணிவு
அசையாத கொள்கைப் பற்று.
இரும்பொத்த மனவுறுதி
உருக்குப்போல் உடல்வலிமை
நெருப்புள்ளும் படுத்துறங்கும்
நெஞ்சத் திடம்.
நெருக்கடி கொடுப்போர்க் கெல்லாம்
பதிலடி கொடுக்கும் திறம்;
கருக்கட்டி விட்ட ஈழத்தை
கரிகாலன்........
கால்பட்ட தாய்நிலத்தை
உரித்தற்ற எவர்கையும்
உரசத் தடையென்ற குரல்;
வரிப்புலிகள் வலுப்பெற்ற மறம்.
''இருளற்ற தமிழீழம்'' உருவாகும்
என்ற ஒருமித்த நம்பிக்கை.
இதற்காக..........
தடைக்கல் உடைத்துப் படிக்கல் ஏறும்விதம்
இதுவே நாளைதரும் சுகம்;,

ஆதாரம்

# உடல் நலமும் உணவுத்தேவையும்



காலை விடிகின்றது. ஏதோ கிடைக்கும் உணவை உண்கின்றோம் பொழுதும் போகின்றது. சந்ததி சந்ததியாக வாழ்க்கை முடிகின்றது.

*இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு எமது உணவு முறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கோதுமை மாவின் பாவனை வந்தது. அதுவே நாளாந்த எமது உணவில் பெரும்பகுதியைப் பிடித்துக்கொண்டது. அதனால் எமது பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டது.*

செ. இரத்தினசிங்கம்

நாம் ஒரு வளமான வாழ்க்கை வாழ்கின்றோமா? உறுதியான மனிதர்களாக நடமாடுகின்றோமா? எதிர்காலச் சந்ததி பலமாக நிலைக்குமா? இவற்றிற்கு விடை காண வேண்டியது அவசியமாகிறது.

காலம் காலமாக ஏட்டுப்படிப்பில் சத்துள்ள சம உணவு எது? அதில் எவ்வளவு மாச்சத்து, கொழுப்புச்சத்து, புரதச்சத்து இருக்க வேண்டும் என்றும் நாளாந்த உணவில் எவ்வளவு என்ன இருக்க வேண்டும் என்றெல்லாம் படித்திருந்தோம் அவற்றை எமது நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்க தவறியுள்ளோம் படிப்பு வேறு வாழ்க்கை முறை வேறு என்று கற்றதை கடைப்பிடிக்கத் தவறிவிட்டோம்.

உணவில் போதிய அளவு புரதம் இல்லாவிட்டால் அது உடல் வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் பாதிக்கும். சிறு பிள்ளைகளின் வளர்ச்சிக்குப் புரதம் எவ்வளவு அவசியம் என்றெல்லாம் அறிந்து வைத்திருக்கும் நாம் உணவில் தேவையான புரதத்தைச் சேர்க்கத் தவறி வருகின்றோம்.

அன்று எமது பாட்டன்மார் மண்வெட்டி எடுத்து 10 மணித்தியாலங்கள் மண்ணைக் கொத்தி பண்படுத்தினார்கள். எம்மால் ஒரு பத்து நிமிடங்கள் தானும் கொத்த முடிகின்றதா?

இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? அன்று அவர்கள் நல்ல திடகாத்திரமாக இருந்தார்கள். இன்று நாமோ திடமற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதோடு எம்மை விட வலுக்குறைந்த ஒரு பரம்பரையையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்

அவர்கள் அக்காலத்தில் ஏட்டில் படிக்கவில்லை ஊட்

# ஆதாரம்

டச்சத்து எது என்று அறியாத காலத்தில் வாழ்ந்தார்கள் அதனால் அவர்கள் நம்மை விட திடகாத்திரமாகவும் பலசாலிகளாகவும் இருந்தார்கள். என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்? அக்காலத்தில் அவர்கள் உட்கொண்ட உணவு தான் அதற்கு காரணம். அன்று அவர்கள் கைக்குத்து அரிசி, வரகு,சாமைச்சோறு ஒடியல்மாபிட்டு, ஒடியல்மா கூழ், பனங்காய்களி, பனங்காய்ப்பிணாட்டு, புளுக்கொடியல், அரிசி, வரகு, குரக்கன், கம்புமா பண்டங்கள் கிழங்கு வகைகள், இலை வகைகள், கீரை வகைகள், சிறுமீன்,இறைச்சி, முட்டை கருவாடு போன்ற உணவுகள் தான் உட்கொண்டார்கள். அந்த உணவு வகையில் புரதம் நிறைய இருந்தன அதனால் அவர்கள் வலுவுள்ள திடகாத்திரமானவர்களாக இருந்தனர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு எமது உணவு முறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. கோதுமை மாவின் பாவனை வந்தது. அதுவே நாளாந்த எமது உணவில் பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டது. அதனால் எமது பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவே உடல்வளர்ச்சிக்கு வேண்டிய புரதம் கிடையாது போயிற்று இதன் பின் விளைவே உடல் நலக்குறைவும் நோய்களை எதிர்க்கும் சக்தியும் இல்லாதுபோனது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஜப்பான் நாடு ஆகியவற்றில் உணவைப் பற்றி பெரிய ஆராய்ச்சிகள் செய்தார்கள். அவர்கள் கண்ட பெறுபேறுகளை வைத்து உணவுப் புரட்சியை ஏற்படுத்தினார்கள். அதன் பயனாக புதிய தலைமுறையினர் உயரத்திலும் உடல் பருமனிலும் மனவளர்ச்சியிலும் பெரு வளர்ச்சி கண்டது. கண்கூடாக காணக் கூடிய காட்சியாகும். அந்த நாடுகளில் உணவின் சுவையை விட உணவில் உள்ள ஊட்டச்சத்திற்கும் புரதசத்திற்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நோய் அற்ற வாழ்க்கைத் திறனில்முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாமோ உணவில் நாசுவைக்கே முதல் இடம் கொடுக்கிறோம். வயிறு நிறைய உண்கிறோம். நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கிறோம் எம்மை விட வலுக்குறைந்த பரம்பரையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

இதைப்பற்றி நாம் சிந்திக்கிறோமா? இதற்கேற்பச் செயற்படுகிறோமா? இவற்றுக்கு மாற்றம் காண வேண்டாமா?

தனிமனிதனுக்கு நாளாந்தம் 2500 கிலோ கலோறிச சக்தி கிடைக்கக் கூடியதாக நிறை உணவு இருக்கவேண்டியது அவசியம் இதில் 1625 கிலோ கலோரி காபோகைதரேற்றாகவும் (மாச்சத்து) 625 கிலோ கலோரி கொழுப்புச் சத்தாகவும் 250 கிலோ கலோரி புரதமுமாக இருக்க வேண்டும் அதாவது 396.3 கிராம் காபோகைதரேற்றாகவும் 67.2 கிராம் கொழுப்புச் சத்தாகவும் 60.9 கிராம் 'புரதமாகவும்" இருக்க வேண்டும்.

எனவே எமது நாளாந்த உணவு நல்ல நிறைவுள்ளதாக இருக்க வேண்டுமானால் மேற்கூறிய அளவுகளில் உணவின் கூறுகள் இருக்க வேண்டியது அவசியம். எமது உணவில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள கோதுமைமாவில் 100கிராம் மாவில் 73 கிராம் காடோகைதரேற்றும் 9 கிராம் கொழுப்பும் 11 கிராம் புரதமும் உண்டென்று கணக்கிடப்பட்டுள்ளது, தினைச் சாமையில் 100 கிராமில் 79.4 கிராம் மாச்சத்தும் 1.1 கிராம் கொழுப்பும் 12.5 கிராம் புரதமும் பனிச் சாமையில் 100 கிராமில் 67.5 கிராம் மாச்சத்தும் 5 கிராம் கொழுப்பும் 11.6 கிராம் புரதமும் உண்டு. குரக்கனில் 100 கிராமில் 72 கிராம் மாச்சத்தும்

# ஆதாரம்

*"நாமோ உணவில் நாசுவைக்கே முதல் இடம் கொடுக்கிறோம். வயிறு நிறைய உண்கிறோம். நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கிறோம்"*

1.3 கிராம் கொழுப்பும் 7.3 கிராம் புரதமும் அதிக அளவு கனியுப்பு வகைகளும் உண்டு. கிழங்கு வகைகளில் மாச்சத்து குறைவாகவே காணப்படுகின்றது. அவற்றில் கனி உப்பு வகைகள் அதிகம் காணப்படுகின்றன எனவே கோதுமை மாவுக்கு ஈடாக குரக்கன் சாமை கிழங்கு வகைகளை நாம் உபயோகித்தால் மாச்சத்தை விட கொழுப்புச் சத்தும் புரதமும் மற்றும் கனியுப்பு வகைகளும் எமது உணவில் வரும் என்பது உண்மையே.

புரதமும் கொழுப்பும் விற்றமின்களும், கனியுப்புக்களும் நிறைவாகக் கொண்ட உணவுப் பாவனைக்கு இருந்த தலைமுறை வழி நடத்தப்பட வேண்டும். அரிசியுடன் கோதுமை மாவின் பாவனையைக் குறைத்து சிறு தானியங்கள் கிழங்கு வகைகளை மாற்றீடாக உண்ணப்பழக வேண்டும்.

எமது நாளாந்த உணவில் இலைவகைகளுக்கு முக்கிய இடம் கொடுகக வேண்டும். முக்கியமாக இலை வல்லாரை, பொன்னாங்காணி, சிறுகீரை ஆகியவை இடம் பெறல் நன்று. காய் கறிகளாக வெண்டி, வாழைக்காய், பலாவிதை, முருங்கை, கரட், பூசனி, போன்றவையும் இருத்தல் நன்று. பருப்பு வகைகளில் உழுந்து, பயறு சோயா அவரை நிலக்கடலை போன்றவைகளும் உணவில் சேரல் நன்று. அத்துடன் மாமிச வகையாக இறைச்சி கோழிமுட்டை, சிறியமீன், நெத்தலிக் கருவாடு' கருவாடு ஆகியவையும் இருத்தல் நன்று. அத்துடன் பாலும் பழவகைகளும் சேரல் வேண்டும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகளில் புரதமும் கொழுப்பும் விற்றமின்களும் கனி உப்புக்களும் நிறைவாக உள்ளன. இவற்றை நாம் உண்பதினால் வேண்டிய புரதத்தையும் கொழுப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பருப்பு வகைகளில் நிறைவான புரதச் சத்து உண்டு. அதாவது சோயா அவரையில் நிலக்கடலையிலும் அதிகளவு உண்டு. இவற்றைப் பல வழிகளில் பயன்படுத்த முடியும். சோயா அவரையை பருப்பாகவும் அதனைப் பயன்படுத்திச் செய்த தாவர மாமிசமாகவும் பாலாகவும் சோயா எணணெயாகவும் நிலக்கடலையைப் பருப்பாகவும் நிலக்கடலையை எண்ணெயாகவும் பயன்படுத்தலாம். இவை அதிகம் புரதத்தை கொடுக்கக் கூடியவை.

அத்துடன் தேங்காய் பாவனையை நாம் குறைக்க வேண்டும். இருதய நோய்க்குத் தேங்காய்பாவனையே அதிக காரணம் அதற்கு மாற்றீடாக நல்லெண்ணை, நிலக்கடலை எண்ணெய் மரக்கறி எண்ணெய் சூரிய காந்தி விதை எண்ணெய் பாம் எண்ணெய் போன்றவற்றைப் பழக வேண்டும். அத்துடன் தேங்காய் பாலை கறியில்சேர்ப்பதை தவிர்க்க வேண்டும். அதற்கு மாற்றீடாக சோயாப் பாலைப் பயன்படுத்த முடியும்.

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் பணத்தில் பெரும் பகுதியை விழுங்கும் சத்துக் குறைவான கவர்ச்சி கரமான உணவுகளை விட்டு இயற்கையாகக் கிடைக்கும் பல ஊட்டம் மிக்க உணவு வகைகளை உட்கொள்ளப் பழகி எதிர்காலத்தில் இத் தேசத்தை வழி நடத்தப் போகும் இளம் சந்ததி வீரியமிக்கவர்களாக உருவாகவழி செய்வோம். □□

# ஆதாரம்

வாசகர் வட்டம்
வாசகர் வட்டம்
வாசகர் வட்டம்

ஆதாரம இதழின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் வாசகர்களின் விருப்பகதிற்கும் தேவைக்கும் ஏற்றவாறு ஆதாரத்தில் வரும் விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்காகவும் வாசகர்களின் விமர்சனங்களை நேரடியாக பெறறுககொண்டு அதற்கேற்றவாறு இதழில மாற்றங்களைக் கொணடு வருவதற்காகவும் ஆதாரம் வாசகர் வட்டங்களை அமைத்து வருகின்றோம். கிராமிய உற்பத்தி குழுக்களை மையமாக வைத்து அமைக்கப்பட்டு வரும் இந்த வாசகர் வட்டத்தில் தலைவர், செயலர் 3 நிாவாக குழு உறுப்பினர்கள் என ஐந்து அங்கத்தவர்கள் உள்ளனர். இது வரை அமைக்கப்பட்ட வாசகர் வட்டங்களில் 13 வாசகர் வட்டங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

1. ஆதாரம் வாசகர் வட்டம் ராமாவில் கோயிலாமனை
வட்டம் - கொடிகாமம்

தலைவர் - லலிதாதேவி சின்னத்தம்பி
ஜனா வீதி, கோயிலாமனை
கொடிகாமம்.

செயலர் - கந்தையா, சின்னத்துரை
ஜனா வீதி, கோயிலாமனை
கொடிகாமம்.

2. ஆதாரம் வாசகர் வட்டம் குடமியன்
வட்டம் – கொடிகாமம்

தலைவர் - சுப்பிரமணியம். விமலாதேவி
குடமியன், நாவற்காடு, வரணி.

செயலர் - விக்கினேஸ்வரன் சந்திரலேகா
குடமியன், நாவற்காடு, வரணி.

3. ஆதாரம் வாசகர் வட்டம் நாவற்காடு
வட்டம் - கொடிகாமம்

தலைவர் – கந்தன், செல்லத்துரை
நாவற்காடு வரணி

செயலர் - கணவதிப்பிள்ளை. மகாதேவன்
நாவற்காடு, வரணி

4. ஆதாரம் வாசகர் வட்டம் மந்துவில் கிழக்கு
வட்டம் - கொடிகாமம்

தலைவர் - மாரிமுத்து. செல்லத்துரை
திலீபன் வீதி, மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

செயலர் - மாணிக்கம். சிவபாலசிங்கம்
கருணாபுரம், மந்துவில் கிழக்கு
கொடிகாமம்.

5. ஆதாரம் வாசகர் வட்டம் கொடிகாமம் தெற்கு
வட்டம் - கொடிகாமம்

தலைவர் - தர்மலிங்கம், தர்மலோஜினி
தவசிக்குளம் கச்சாய் வீதி,
கொடிகாமம்

செயலர் - பாலகிருஸ்ணன். பவாணிதேவி
ஒட்டங்கேணி வீதி, கச்சாய் வீதி,
கொடிகாமம்

6. ஆதாரம் வாசகர் வட்டம் இடைக்குறிச்சி வரணி
வட்டம் - கொடிகாமம்

தலைவர் - சிதம்பரநாதன். நிரஞ்சன்
இடைக்குறிச்சி, வரணி
கொடிகாமம்.

செயலர் - சிவராசசிங்கம். இராகுநாதன்
இடைக்குறிச்சி, வரணி

7. ஆதாரம் வாசகர் வட்டம் கெற்பலி
வட்டம் - கொடிகாமம்

தலைவர் - தனபாலசிங்கம். விஜோதா
இல 01, கெற்பலி, மிருசுவில்

செயலர் - சேல்லர். வல்லிபுரம்
கெற்பலி மேற்கு, மிருசுவில்

8. ஆதாரம் வாசகர் வட்டம் சுழிபுரம் கிழக்கு
வட்டம் - சங்கானை

தலைவர் - இரத்தினசபாபதி. வைத்திலிங்கம்
வீரபத்திரர் கோவிலடி
சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்

செயலர் - முத்தையா. காந்தன்
வீரபத்திரர் கோவிலடி
சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்

9. ஆதாரம் வாசகர் வட்டம் சங்கானை மத்தி
வட்டம் - சங்கானை

தலைவர் - வல்லிபுரம். சிறிதரன்
சிலம்பு புளியடி,
ஆலம்பத்திரி வீதி, சங்கானை

செயலர் - பொன்னையா. துரைராசா
கென்ஸ்மன் தோட்டம்,
தோட்டிலடி, சங்கானை

10. ஆதாரம் வாசகர் வட்டம் வட்டு கிழக்கு
வட்டம் - சங்கானை

தலைவர் - இராசரத்தினம். நந்தகுமாரி
மேஜர் பிரசாத் வீதி,
வட்டுகிழக்கு, சித்தங்கேணி

செயலர் - புவனேஸ்வரன். தவமணி
வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை

11. ஆதாரம் வாசகர் வட்டம் அச்செழு
வட்டம் - கோப்பாய்

தலைவர் -
சங்கரப்பிள்ளை. உமாமகேஸ்வரன்
கருணாகரன் வீதி,
அச்செழு, நீர்வேலி

செயலர் - மாரிமுத்து. தவராசா
கபடி ஒல்லை, அச்செழு, நீர்வேலி

12. ஆதாரம் வாசகர் வட்டம் ஆவரங்கால் மேற்கு
வட்டம் - கோப்பாய்

தலைவர் - செல்லத்துரை. தவராஜசிங்கம்
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்

செயலர் - பூபாலு. ராஜ்பவன்
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்

13. ஆதாரம் வாசகர் வட்டம் நவாலி வடக்கு
வட்டம் - சண்டிலிப்பாய்

தலைவர் - நிர்மலாதேவி. தர்மலிங்கம்
புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

செயலர் - சண்முகநாதன். சிவகுமாரி
புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.




## குடமியன்



# எங்கள் ஊர்

வளர்ந்து வரும் ஒரு நாட்டின் பொருண்மிய மேம்பாட்டில் கமத்தொழிலும் கைத்தொழிலும் முக்கிய பங்கினை வகிப்பதை நாம் உணரமுடிகின்றது. இத்தொழில்களின் பிறப்பிடமே கிராமங்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. உதிரத்தையே உரமாக்கும் உழவர்களைக் காண வேண்டுமாயின், கிராமங்களை நாடித் தான் செல்ல வேண்டும். எங்களூராகிய குடமியனும் இத்தகைய கிராமங்களில் ஒன்றே என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகின்றோம்.

ஏர் பிடித்த உழவர்களே தான் எங்களூரில் அதிகமாக வசிக்கின்றனர். அரச தொழில் பார்ப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். வியாபாரம் செய்பவர்கள் மிகச் சிலரே. சிலர் வெளிநாடுகளிலும் வேலை செய்கின்றனர். சீவல் தொழிலாளர் பலர் பனை வளத்திலிருந்து மிகுந்த பணவருவாயைப் பெறுகின்றனர்.

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்” என்பது போல இனக் கலவரங்களால் பாதிக்கப் பெற்று இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு பாசத்துடன் நேசக்கரம் நீட்டி ஆறுதல் அளித்தது எங்களூர் என்று நிறைவுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்களூர் விவசாயிகளுக்கு வயலிலோ அன்றி தோட்டத்திலோ இறங்கி விட்டால் நேரம் போவது தெரியாது. கருமமே கண்ணாக கர்ம வீரர்களாக மாறிவிடுவார்கள். சில விவசாயிகள் தொழிலில் ஆர்வம் இருந்தும் பணவசதி இன்றிக் கஷ்டப்பட்டனர். எமது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவர்கள் கஷ்டங்களை உணர்ந்து தாமே பொறுப்பு நின்று வங்கிகள் மூலம் கடனுதவியைப் பெற்றுக் கொடுத்துள்ளது. கடந்த சில வருடங்கள் போல் இம்முறையும் விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு கடன் கிடைப்பதற்கு இந்நிறுவனம் பெரிதும் உதவி செய்தது. வங்கிகள் தாம் கொடுக்கும் கடன்களை நேர காலத்திற்கு கொடுக்கத் தவறுவதால் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

எமது ஊரில் கோழிகளுக்கு இலவசமாக இந்நிறுவனத்தால் தடுப்பூசியும் ஏற்றப்படுகின்றது. இதனால் விலங்கு வேளாண்மையும் விருத்தியடைந்துள்

□ சுப்பிரமணியம். விமலாதேவி

# ஆதாரம்

ளது பழமரங்களுக்கு இங்கு பஞ்சமே இல்லை. தென்னந்தோப்புகளும் தோட்ட நிலங்களும் எமது ஊரில் பெரும்பகுதியாக அமைந்துள்ளது. இங்கு தென்னை, மா நன்கு செழித்து வளரும் மிளகாய், புகையிலை, மரக்கறிப்பயிர்களும் இங்கு மிகுந்த பலனைத் தருகின்றன. வெற்றிலைக் கொடியையும் ஒரு சிலர் பயிரிட்டுள்ளனர். மரவள்ளிக்கும் குறைவில்லை. எமது ஊரின் வயல் வெளிகளின் பசுமையின் அழகே தனி அழகு தான். வைகறைப் பொழுதில் நிலவொளியில் மார்கழிப் பனியில் தோய்ந்து சிலிர்த்திருக்கும் நெற்பயிரின் பசுமை அழகைப் பார்க்கும்போது சின்னக் குழந்தையின் பூஞ்சிரிப்பின் இனிமையை உணர முடிகின்றது. கதிர் முற்றி மஞ்சளாகி நிலம் நோக்கும் போது தாய்மையின் நிறைவை நெஞ்சினில் நிரப்புகின்றது. தோட்ட நிலங்கள் கூட பூவும் பிஞ்சுமாய் மணத்தை அள்ளிக் கொண்டு போகின்றது. எமது ஊர் சுகாதார வசதி குறைந்தது. கடந்த வருடம் எம் ஊரவர்கள் மலேரியா நோயால் திரும்பத் திரும்ப பாதிக்கப்பட்டு அவர்கள் பட்டபாடு அப்பப்பா இப்ப நினைத்தாலும் பயங்கரம். நோய் ஒரு பக்கம், பயிர் அழிவு ஒரு பக்கம். மக்களைத் துயரம் வாட்டி எடுத்து விட்டது. இவ் விடத்தில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் எமது அயலூருக்கு இவ்வருடம் 'மலத்தியோன்' தெளிக்கப் பட்டது. ஆனால் எமது பக்கத்திற்கு தெளிக்கவில்லை. என்ன காரணமோ! நாமறியோம்.

எம் ஊரின் வயல் வெளிகளில் பெண்கள், நாற்று நடும்போதும், களை பிடுங்கும்போதும், அரிவி வெட்டும் போதும் இனிமையான கிராமியப் பாடல்களைப் பாடுவார்கள், எம் ஊர்ப் பெண்கள் நன்றாக ஒப்பாரி, தாலாட்டுப்பாடல்களும் பாடுவார்கள், பழமையும் பெருமையும் மிக்க தமிழர் பண்பாட்டில் எம் ஊரவர்கள் மிகுந்த ஆர்வமும், அக்கறையும் கொண்டு வாழ்கின்றனர்.

சிட்டி வேரம் அம்பாள் ஆலயத்தைப் பற்றி அதன் சிறப்புப் பற்றி பல வெளியூரவர்களுக்கும் தெரியும். எமது ஊருக்கு வடக்கே நாவற்காடு என்னும் ஊர் இருக்கின்றது. எமது ஊரின் வடக்கு எல்லையாக அமைந்துள்ள வீதி இரு ஊர்களையும் பிரிக்கின்றது. இவ் வீதி சிட்டிவேரம் அம்பாள் ஆலயத்திலிருந்து கிழக்கு நோக்கி மிருசுவிலுக்கு செல்கின்றது. எமது ஊரின் கிழக்கெல்லையாக வயல்வெளியும் அதையடுத்து மிருசுவிலும் அமைந்துள்ளது. தென்திசையில் கொடிகாமம் அமைந்துள்ளது. கொடிகாமத்திலிருந்து வடக்கு நோக்கிபருத்தித்துறைக்குச் செல்லும் பிரதான வீதி எம் ஊரின் மேற்கு எல்லையாக செல்கின்றது. இவ் வீதியை அண்மித்துத்தான் சிட்டிவேரம் அம்பாள் ஆலயம் இருக்கின்றது. ஆலயத்தைச் சூழ வயல்கள் இருக்கின்றன. வயல்களுக்கு மேற்கே தாவளை இயற்றாளை எனும் ஊர் உண்டு.

ஊர் வயல் வெளிகளில் நெல் அறுவடை முடிந்த பின்னர், வயல்களில் கௌபீ, பயறு, உழுந்து, எள்ளு என்பன பயிரிடுகின்றனர், மேட்டு நிலத்திலும் இப்பயிர்களை கார்த்திகை, மார்கழி மாதங்களில் பயிரிடுகின்றனர். இத்தானியங்களை விட குரக்கன், சோளம், நிலக்கடலை, கம்பு முதலிய தானியங்களை மேட்டு நிலத்தில் பயிரிடுகின்றனர்.

மக்களைப் பொறுத்தவரையில் பலர் சுதேச உணவு வகைகளை மிகவும் விரும்பி உண்கின்றனர். குரக்கன் பிட்டு, ஒடியல் பிட்டு, பாணிப்பனாட்டு, பனாட்டு, மரவள்ளி மா பிட்டு என்பன குறிப்பிடத் தக்கன. நெல் அரிசிச் சோறு பிரதான உணவாகின்றது. கம்புப் பயிர் தற்போது சிலர் பயிரிட்டு அதிலிருந்தும் உணவுப்பொருட்கள் தயாரிக்கின்றனர் புழுக்கொடியலும் பனங்கட்டியும் சேர்த்து சாப்பிடும் போது அதன் ருசியே தனி தான். □□







# சுழிபுரம் கிழக்கு

விடுதலை வேண்டி நிற்கும் தமிழீழத்தின் தலைப் பிரதேசமாகிய யாழ்மாவட்டத்தின் வடமுனையில் அமைந்துள்ள ஒரு செழிப்புள்ள கிராமம் தான் எங்களூராகிய சுழிபுரம் கிழக்கு. எங்களூரிலே வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால் அவை வீணடிக்கப்படுகின்றன. இது வரை காலமும் அதாவது ஈழவிடுதலைப்போர் முனைப்படையாத காலத்தில் மக்கள் விழிப்படையாமல் இந்த வளங்களைப் பயன்படுத்தாமல் இருந்தனர். ஆனால் இன்று அவை பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் மக்களுக்கு உண்டு.

எங்களூரின் பரப்பளவில் அரைவாசிக்குமேல் விவசாய சாகுபடிக்கு ஏற்ற பகுதிகளாகும். கிராமத்தின் விவசாயிகள் மாரிகாலத்தில் நெற்சாகுபடியைச் செய்கின்றார்கள். மழையை நம்பியே நெற்சாகுபடி செய்யப்படுகின்றது. கோடைகாலங்களில் தோட்டப்பயிர் வகை செய்கிறார்கள். சுழிபுரம் வயல் வெளிக்காய்கறிகள் சுவையில் மிகவும் பிரசித்தமானவையாகும். இங்குள்ள மண் அமைப்பு காய்கறிகளுக்கு ஏற்ற சுவையையும் ஜீவசத்துக்களையும் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. சிறுதானியமாகிய குரக்கன் மேட்டுநிலங்களில் சாகுபடி செய்யப்படுகின்றது.

எமதுவிவசாயத்துறைக்குள்ள முக்கிய பிரச்சனை நீர்ப்பாசனப் பிரச்சனையாகும். வருடந்தோறும் கடும் வரட்சியினால்நெற்சாகுபடி பாதிக்கப்படுகின்றது. அதே நேரத்தில் ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் பெய்கின்றமிதமிஞ்சியமழை நீர் கடலை ஓடியடைகின்றது. நீரைச்சேமித்துவைத்து உபயோகிக்கக்கூடிய வகையில் ஒரு சிறப்பான வசதி கடந்த காலங்களில் காணப்படவில்லை. இன்று துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தால் இந்நிலை மாறி வருகின்றது என்றே கூறலாம்.

எமது சுழிபுரம் கிழக்கு உற்பத்திக் குழுவினரின் அயராத உழைப்பும் பொருளியிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியும் கிடைத்ததால் கிராமத்திலுள்ள ஐந்து குளங்களில் நான்கை புனரமைக்க முடிந்தது. மற்றைய குளமாகிய தம்பளப் பாய்க்குளம் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு அண்மையில் உள்ளதால் திருத்த முடியவில்லை எங்கள் கிணறுகளில் நன்னீர் எல்லாம் உவர்நீராகுவதற்கு காரணம் எங்கள் குளங்கள் எல்லாம் தூர்ந்து போனமையும் நீரை நாம் தேக்கி

☐ இரத்தின சபாபதி· வைத்திலிங்கம்

வையானமையும் தான். இன்று இந்நான்கு குளங்களும் ஆழமாக்கப்பட்டதுடன் அதன் கட்டுக்களும் நீர் தேங்கக் கூடிய வகையில் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. அத்தோடு திருவடி நிலையில் நன்னீர் வெளியேறாமலும் உவர்நீர் உள்ளே வராமலும் தடுப்பதற்கு உள்ளூர் முதலீடுகளான மண்மூட்டை, பனைமரம் என்பவற்றின் மூலம் அணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு குளத்திற்கும் இடையில் கால்வாய்கள் மூலம்தொடர்பிருக்க வேண்டும் என்ற திட்டத்தில் உற்பத்திக்குழுப் பகுதியினர் புதிய கால்வாய்கள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் எமது சுழிபுரம் கிழக்கு உற்பத்திக்குழுவினர் ஊடாக விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு பயிர்ச்செய்கைக் கடன், சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் என்பவற்றோடு விவசாய உள்ளீடுகளையும் வழங்கி வருகின்றனர். இன்னும் விவசாயக் கருத்தரங்குகள், வதிவிட வேளாண்மைப் போட்டி, வேளாண் மன்னர்போட்டி என்பவற்றையும் நடாத்தி வருகின்றனர். இதன்மூலம் நாங்கள் பெரும்பயனை அடைந்துள்ளோம்.

கடற்கரையை அண்டிய கிராமம் ஆதலால் மீன்பிடித் தொழில்த்துறை சிறப்பாக விளங்கும் என்று சொல்லாமலேயே புரியும். அதே வேளை கடற்படையின் அட்டகாசங்கள் ஆளப்பதிந்துள்ள கிராமம் என்பதும் உங்களால் புரிந்து கொள்ள முடியும். எமது கிராமத்தின் மேற்குப்பகுதிமக்களும்கடற்கரையை அண்டி வாழும் மக்களும்மீன்பிடித் தொழிற்றுறையில் சில முக்கிய பிரச்சனையை எதிர்நோக்குகின்றார்கள். இயந்திரம் பூட்டப்பட்ட வள்ளங்களையோ இழுவைப் படகுகளையோ நவீன பொறியணி வலைகளையோ உபயோகிக்க முடியாத நிலை இன்று காணப்படுகின்றது.

கரையோர மீன்பிடித் தொழிலே பாரம்பரியமுறையில் ஓரளவிற்கு செயற்படுகின்றது. இத்தொழிலில் ஈடுபடுகின்ற எங்களின் வாழ்க்கை உறுதியற்றதாகவும் வருமானம் குறைந்ததாகவும் காணப்படுவதால் எங்களில் பலர் இத்தொழிலை விட்டு வெளியேறி விவசாயக் கூலிகளாக மாறுகின்றனர். கிராமத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய காட்டுப்பிலப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு ''பனையால் விழுந்தவனை மாடு மிதித்ததாம்'' என்பதுபோல வழமையாகவேஏழ்மைநிலையில் இருந்த மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசின் தாக்குதல்கள் அவர்களை இடம்பெயர வைத்துள்ளன.

எங்கள் ஊரின் மேற்கு வடக்குப் பகுதிகளில் ''கற்பகதரு'' ஆகிய பனந்தோட்டங்கள் பல்வேறுபட்ட பொருளியல் பலன்களைக் கொடுக்கின்றன. இப்பனந்தோட்டங்களின் நிலைமை அழிவை நோக்கிச் செல்கின்றது. ஆனாலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ''கற்பகச் சோலை'' பனை நடுகைத் திட்டத்தின் கீழ் உற்பத்திக் குழுவினர் புதியபனந்தோட்டங்களை உருவாக்குவதில் முயன்று வருகின்றனர்.

பதநீரிலிருந்து பனங்கட்டி காய்ச்சுவது மட்டுமன்றி பதநீரிலிருந்து சீனியும் தயாரிக்கலாம். சீனி தயாரிப்பதற்கென ஒரு தொழிற்சாலை அமைக்கப்படாதது வருந்தக்கூடியதாகும். கூட்டுறவாகவோ தனி முயற்சியாகவோ இத்தொழிலை ஆரம்பிக்கலாம் எனக் கூறமுடியும். பனையோலையில் இருந்து பெட்டி, கடகம், பாய், வெங்காயக் கூடை போன்ற குடிசைத் தொழில்கள் செய்யும்முறை எமது கிராமத்தில் ஒருசில குடும்பங்களிடம்தான் உள்ளன. இது வேதனைப்படக் கூடிய ஒன்றாகும். எமது கிராமத்தில் வேலையில்லாப் பிரச்சனை இருக்கின்றது.

வீட்டில் பெண்களும் குழந்தைகளும் பொழுதுபோக்காக இக் கைத்தொழிலைச் செய்து கொள்ள முடியும் அதன் மூலம் குடும்பத்தினருக்கு சிறந்த வருவாயைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது கிராமத்தில் பிரதான தொழில்களான விவசாயம், மீன்பிடித் தொழிலுக்கு அடுத்ததாக சீவல் தொழில் விளங்குகிறது. எங்களூரில் ஏறக்குறைய 20 சதவீதமான குடும்பங்கள் இத்தொழில் மூலம் பயனடைந்து வருகின்றனர். சங்கானை வட்டத்திலேயே குறிப்பிடத்தக்க அளவு கள்ளையும் பதநீரையும் உற்பத்தி செய்கின்றோம். இவர்களுடைய வாழ்க்கை நிலை பின்தங்கி இருப்பது விசனிக்கத்தக்கதாகும். இதற்கு காரணம் இவர்களிடையே இருக்கும் கல்வியறிவின்மையும் மூட நம்பிக்கையுமே ஆகும்.

ஒரு காலத்தில் எங்களூரின் மிகப்பெரிய செல்வங்களாக விளங்கிய செம்மறி ஆடுகளும் ஏனைய கால்நடை இனங்களும் இன்று அருகிப்போய் எமது வருமானத்தை ஈட்டித் தருகின்ற தொழில்களில் நான்காம் இடத்தை அடைந்துள்ளது. இதற்குக் காரணம் இன்றைய ஸ்ரீலங்கா அரசின் பேரினவாதப் போக்கும் மக்களின் உள்ளூர் உற்பத்தியை பயன்படுத்தி அதன்மூலம் உச்சப்பயனைப் பெறவேண்டும் என்ற எங்களின் ஆர்வமின்மையுமே ஆகும். இன்று இந்நிலை ஓரளவிற்கு மாறிவருகின்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உதவியுடன் கிராமிய உற்பததிக் குழுவினர் பல குடும்பங்களுக்கு பசுமாடுகளையும் நல்லின ஆடுகளையும் வீட்டுப் பறவையினங்களையும் கடன் அடிப்படையிலும் மக்களுக்கு வழங்கி உள்ளனர். இன்று கால்நடை வளர்ப்பில் எங்களில் பலர் ஆர்வம் காட்டி வருவது மகிழ்ச்சிக்குரியது. தற்போது எங்களூரில் கால்நடைப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கு சுழிபுரம் கிழக்கு உற்பத்திக் குழுவினர் நிர்வாகிகள் முயன்று வருகின்றனர். சூழலைப் பாதுகாப்பதற்கும் மக்களின் விறகுத் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்குவதற்குமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிமுகப் படுத்திய சிக்கனச் சூட்டடுப்பு அமைப்பதற்கு எங்கள் கிராமத்திலுள்ள பலருக்கு உற்பத்திக்குழுப் பகுதியினர் உதவியுள்ளனர். இதனால் எங்களூரின் மரங்கள் விறகிற்காக தறிக்கப்படுவது ஓரளவு குறைந்துள்ளது.

இத் தரவைப் பகுதிகளில் வெள்ளைக் களிமண்ணும் காணப்படுகின்றது. இவ் வெள்ளைக் களிமண் பிசுபிசுத்தன்மையும் உறுதியான தன்மையும் உடையது. கிராமத்தில் களிமண்ணைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டுகிறார்கள். இக் களிமண்ணைப் பயன்படுத்தி கட்டிகளாக்கி செங்கட்டிகளைப்போன்று கட்டிடங்கள் அமைக்க உதவும். எதிர்காலத்தில்பூச்சு வேலைகள் செய்யவும் சிறப்பாக கோப்பைகள் பாத்திரங்கள் செய்யவும் முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக நல்லமுறையில் இக்களிமண்ணை பயன்படுத்தவில்லை. இதனை நல்லமுறையில் பயன்படுத்தி நல்ல ஆக்கத் தொழில்கள் செய்யவேண்டும்.

கிராமத்தின் பாலிகாடு மழுவை ஆகிய பகுதிகளில் பெற்றோல் இருப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. சில புவியியல் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் பார்வையிட்டு பெற்றோல் இருப்பதற்குரிய சாத்தியக் கூறு உண்டு எனக்கூறுகின்றார்கள். ஸ்ரீலங்கா பேரினவாத அரசு 70களில் இந்த ஆராய்ச்சியைமேற்கொண்ட பொழுதும் இது தமிழ்ப்பிரதேசம் என்ற ஒரு காரணத்திற்காக மேற்கொண்டு முயற்சிகள் ஏதும் நடாத்தவில்லை.

திருவடி நிலைக்கும் சம்பில் துறைக்கும் இடைப்பட்ட பகுதியில்காணப்படும் மண்கண்ணாடி செய்வதற்கு

சாத்தியமானதாகும். இம்மண்ணைப் பயன்படுத்தி கண்ணாடித் தொழிலை வளர்க்கமுடியும். இத்துறையில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் நல்ல பயனைக் கொடுக்கும் என்று கூறுகிறார்கள். ஆனால் இத்தொழிலில் ஈடுபடுவதற்கு நீண்ட தொழில்நுட்ப அறிவும் பெருந்தொகையான மூலதனமும்தேவை எனவே மலரும் தமிழீழத்தில் உருவாகும் கைத்தொழில் நிறுவனம் இந்த வளத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனக்கிராமமக்களாகிய நாங்கள் விரும்புகின்றோம்

எமது சுழிபுரம் கிழக்கு கிராமத்தின் எல்லையாகிய கழிக்கரைப்பகுதியில் கடலுக்குள் வெள்ளம் ஓடும் வாய்க்கால்களில் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும் உப்பு தானாக விளைவதைக் காண்கிறோம்.ஆனால் இன்று மாதகலில் நிலை கொண்டுள்ள படையினர் உப்பு உற்பத்தி முயற்சிக்கு பெரிதும் இடையூறாக உள்ளனர். எதிர்காலத்தில் இராணுவம்இந்த இடத்தை விட்டு விலகும் பட்சத்தில் கிராமத்தின் உப்புத்தேவை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

எமது கிராமம் சரித்திர சமய முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இராமருடைய திருவடிபட்டதனால் சிறப்புப்பெற்ற தலம் திருவடி நிலை. இத்திருவடி நிலை தல விசேடம், தீர்த்தவிசேடம், மூர்த்தி விசேடம் பெற்ற தலமாகும். அது மாத்திரமல்லாமல் தமிழீழத்தின் வடகரையோரம் திகழும் வனப்புமிக்க கடற்கரைப்பகுதியாகவும் இது உள்ளது. அது மாத்திரமன்றி இராணுவம் ஆக்கிரமிக்க முடியாத பகுதியாகவும்இது விளங்குகிறது. நாட்டின்பல பாகங்களிலுமிருந்தும் சமய அன்பர்களும் உல்லாசப் பிரயாணிகளும் திருவடி நிலையில் தினம் தோறும் கூடுவார்கள். இத்துறையில் முன்னர் வடபகுதியில் கீரிமலைக்கு அடுத்த இடம் திருவடிநிலைக்கு உண்டு. ஆனால் இன்று துர்அதிஷ்டமாக கீரிமலை இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகி உள்ளது. எனவே திருவடி நிலையை அபிவிருத்தி செய்வதன் மூலம் எங்கள் கிராமத்தை செல்வச்செழிப்பிற்கும் சிறப்பிற்கும் வழிகோல முடியும்

எங்களூரில்ஏறக்குறைய 700 குடும்பங்கள் வாழுகின்றன. அவர்களில் 200 குடும்பங்கள் நாட்டுப் பிரச்சனை காரணமாக எமது கிராமத்தை விட்டு வெளியேறி உள்ளனர். இங்கு எழுத்தறிவு அற்றோர் இல்லை என்றே கூறலாம். எமது கிராமம் ஒரு தன்னிறைவு கொண்ட கிராமமாக விளங்க முடியும் இந்த வகையிலேயே இயற்கைவளம், நீர்வளம், நிலவளம் ஆகிய சகல வளங்களும் உள்ளன. அதே நேரத்தில் கிராமத்து இளைஞர்களிடையே வேலையில்லாப் பிரச்சனை முக்கிய பிரச்சனையாக உள்ளது பல்கலைக்கழக பட்டதாரிகள் தொடக்கம் சாதாரண கல்வியறிவு உடையவர்கள் வரை பாதிப்புறுகின்றனர் ஆனால் இன்று தமிழீழத்தின் பல நிர்வாகக் கட்டமைப்புகள் உருவாகி வருகின்றன. அந்நிர்வாக அமைப்புக்கள் எங்கள் இளைஞர்களை உள்வாங்கி வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

வாலிபர்கள் பலர் விவசாயத்தில் ஈடுபட்டாலும் விரிவுபடுத்தப்பட்ட வகையில் ஈடுபடுவதற்குரிய வசதிகள் இல்லை. விவசாயிகளுக்கு உப உழைப்புத்தன்மை இல்லை. பல்வேறு தொழில் புரிபவர்களுக்கும் தொழிற் பாதுகாப்பின்மையும் உறுதியின்மையும் காணப்படுகின்றது.

இன்று நடைபெறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எங்கள் கிராமம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அதே வேளையில் ஒரு தன்னிறைவுள்ள சுபீட்சமான கிராமமாக உருவாக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என உற்பத்திக் குழுவினரோடு ஆதாரம் வாசகர் வட்ட இளைஞர்களும் சுழிபுரம் கிழக்கு மக்களிடம் வேண்டிக் கொள்கின்றனர். □□

## கால்நடை வளர்ப்பாளர்களே !

உங்கள் கால்நடைகளுக்கு தேவையான
தீவனங்கள்

மருந்துவகைகள், தடுப்பூசிகள், கர்ப்பகாலத்தில்
ஆடுகளுக்கான ஏற்பூசிகள், பால், முட்டை,
பண்ணை உபகரணங்கள்

மற்றும் உள்ளீடுகளையும் ஆலோசனைகளையும்
தேவையான காலத்தில் பெற்றுக்கொள்ள




# வெண்மை

விலங்கு வேளாண் சேவை

இல.23 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

"வெண்மை நம் நாட்டின் மேன்மை"


களைத்து
வரும்
என் பிள்ளைக்கு
FRUTTEES
Malties
CHESTO
இவைதான்
உகந்தவை